பக்கங்கள்-16 | 31.ஐப்பசி.2021 | விலை-30.00







# தினப்புயல்


THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06








மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -362





## "ஒரு நாடு ஒரு சட்டம்" - குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்திருக்கும் ஜனாதிபதி கோட்டாபய

## இலங்கைத் தீவில் முஸ்லிம்களுக்கு எதிரான தொடர் வன்முறைகள் – வரலாற்று பதிவு

## விவசாயிகளின் தொடர் போராட்டம் நடப்பது என்ன?

# ‘ஒரு நாடு, ஒரு சட்டம்’ - குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்திருக்கும் ஜனாதிபதி கோட்டாபய



இலங்கை அரசியல் திருத்த சட்டத்தில் இருப்பதை நடமுறைப்படுத்தினாலே போதுமானது. அரசியலில் இனவாத துறவிகள் மூக்கை நுழைப்பது ஆபத்து. அது மற்றுமோர் போருக்கு வழி அமைக்கும்.

இலங்கையின் அரசியலமைப்பின் 20வது திருத்தத்திற்கான வரைபு வெளியிடப்பட்டது. இது தொடர்பில் விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் சாதகபாதகத் தன்மைகள் அலசி ஆராயப்பட வேண்டும். கடந்த காலத்தில் மேற் கொள்ளப்பட்ட திருத்தங்களை ஒப்பிட்டு ஆராய்வதே சிறந்தது. அப்போதுதான் அதன் மாற்றங்களும், குறைகளையும் சரிவர அறிய முடியும்.

அந்தவகையில் சீர்திருத்த வரைபின் படி,

01. ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.
02. பிரதமரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
03. அரசியலமைப்புப் பேரவை நீக்கப்பட்டுள்ளது.
04. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நீக்கப்பட்டுள்ளது.
05. தேசிய பெறுகை ஆணைக்குழு நீக்கப்பட்டுள்ளது.
06. கணக்காய்வு சேவை ஆணைக்குழு நீக்கப்பட்டுள்ளது.
07. தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அதிகாரங்கள் குறைக்கப் பட்டுள்ளன.
08. தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
09. பாராளுமன்ற பேரவை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
10. அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பிலான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.
11. ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மை பாதிக்கப்படுகின்றது.
12. சட்டங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கான கால எல்லை ஏழு நாட்களாக குறைக்கப் பட்டுள்ளது.
13. பொதுமக்களுக்கு அறிவித்தல் இன்றி அவசர சட்ட மூலங்களை ஆக்குவதற்கான ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளது.
14. பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்படும் சட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி பொதுசன அபிப்பிராயம் கோர முடியும்.
15. ஜனாதிபதியாக போட்டியிடுவதற்கான வயதெல்லை 30 ஆக குறைக்கப்பட்டுள்ளது.
16. இரட்டை பிராஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றம் செல்லலாம்.
17. தேர்தல் ஆணைக்குழு தனியார் ஊடகங்களை கட்டுப்படுத்தலாம்.

ஜனாதிபதியின் அதிகாரங்கள்.
ஜனாதிபதிக்கு இருந்த பின்வரும் கடப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.
01. அரசியலமைப்பு மதிக்கப்பட்டு போற்றப்படுதலை உறுதிப்படுத்தல்.
02. தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்தல்.
03. அரசியலமைப்பு பேரவை மற்றும் VIIஅ என்னும் அத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனங்களின் முறையான செயற்பாட்டை உறுதிப்படுத்தலும் வசதியளித்தலும்.
04. தேர்தல் ஆணைக்குழுவின் மதியுரையின் மீது சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களும் மக்கள் தீர்ப்பும் நடைபெறுவதற்கான உகந்த நிபந்தனைகள் உருவாக்கப் படுதலை உறுதிசெய்தல்.
05. ஜனாதிபதி தன்னுடைய அதிகாரம், கடமை, செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறவேண்டிய அவசியம் இல்லை.
06. ஜனாதிபதிக்கு எதிராக எவ்வித வழக்கு நடவடிக்கைகளையும் மேற் கொள்ள முடியாது.
07. ஜனாதிபதிக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைக்கூட தாக்கல் செய்ய முடியாது.

ஜனாதிபதிக்கு பின்வரும் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.
01. பாராளுமன்றத்தை எந்நேரத்தலும் கலைப்பதற்கான அதிகாரம். ஆயினும், ஜனாதிபதியினால் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடாத்தப்பட்ட பாராளுமன்றத்தினை ஒரு வருடம் முடிவுறும் வரை ஜனாதிபதியினால் கலைக்க முடியாது.
02. ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வைத்திருக்க முடியும்.
03. அமைச்சர்களின் எண்ணிக்கையில் ஜனாதிபதிக்கு மட்டுப்பாடு கிடையாது.
04. பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிக்கலாம் பதவி நீக்கம் செய்யலாம்.
05. பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினை ஜனாதிபதி நியமிக்கலாம்.
06. தேர்தல் ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமிக்கலாம். பதவி நீக்கம் செய்யலாம்.
07. தேர்தல் ஆணைக்குழுவிற்கு தேர்தல் திணைக்களத்தில் கடமையாற்றிய ஒருவர் இருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது.
08. நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கான அங்கத்தவர்களை நியமிக்கலாம். பதவி நீக்கம் செய்யலாம்.
09. நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிக்கின்றபோது முதல் நிலை நியாயாதிக்க நீதிமன்றங்களில் கடமையாற்றிய அனுபவத்தினை பெற்ற நீதியரசரை நியமிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது.
10. பொலிசு ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிக்கலாம். பதவி நீக்கம் செய்யலாம்.
11. பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிக்கின்ற போது பிரதி பொலிஸ்மா அதிபராக இருந்த ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது.

பாராளுமன்ற பேரவை
01. இது 05 அங்கத்தவர்களை கொண்டது. அவர்கள்
1. பிரதமர்
2. சபாநாயகர்
3. எதிர்க்கட்சித் தலைவர்
4. பிரதமரினால் முன்மொழியப்படுகின்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினர்.
5. எதிர்க்கட்சித் தலைவரினால் முன்மொழியப்படுகின்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினர்.
இவர்களுள் 4, 5ம் நபர்கள் 1ம், 2ம், 3ம் நபர்கள் சார்ந்த சமூகங்கள் அல்லாத சமூகங்களில் இருந்து தெரிவு செய்யப்படவேண்டும்.

பாராளுமன்ற பேரவையின் கடமை
ஜனாதிபதியினால் பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ள ஆட்களும் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப் படுகின்ற ஆட்களும் தொடர்பான அவதானங்களை கோருகின்ற பொழுது அதற்கான அவதானங்களை சமர்ப்பிப்பது மாத்திரமே ஆகும். குறித்த அவதானங்கள் ஒரு வார காலத்தினுள் சமர்ப்பிக்கப்படவில்லையானால் ஜனாதிபதி நியமனத்தினை மேற்கொள்ளலாம்.
பதவிக்காலம் பாராளுமன்றத்தின் பதவிக்காலமாகும்.
பிரதமரினாலும் எதிர்க்கட்சித தலைவரினாலும் நியமிக்கப்படும் நபர்கள் ஜனாதிபதியினால் நீக்கப்பட்டு வேறு நபர்களை நியமிக்கக் கோரலாம்.

அமைச்சரவை
19ம் திருத்தத்திற்கு முன்னரான நிலைக்கு மீளக் கொண்டு வரப்பட்டுள்ளன.
குறிப்புகள்:
20ஆவது அரசியலமைப்பு திருத்தம் : முக்கிய விடயங்கள்(சுருக்கமாக).
1. புதிய பாராளுமன்றம் நியமிக்கப்பட்டு ஓராண்டிற்குப் பின்னர் ஜனாதிபதியினால் எந்த சந்தர்ப்பத்திலும் கலைக்க முடியும்.
2. எத்தனை அமைச்சர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கத்திற்கு முடியும்.
3.ஜனாதிபதி எந்த அமைச்சையும் தன் வசம் வைத்திருக்கலாம்.
4.சுயாதீன ஆணைக்குழுக்களின் அங்கத்தவர்கள், தலைவர்களை நேரடியாக நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம்.
5.ஜனாதிபதியாக போட்டியிடுவதற்கான குறைந்த வயதெல்லை 30ஆக குறைப்பு.
6. உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நியமனங்களை ஜனாதிபதியினால் வழங்க முடியும்.
7. நீதிச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு.
8.ஜனாதிபதி, காலத்திற்கு காலம், பிரகடனத்தின் மூலம் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு அழைப்பு விடுக்கலாம், அமர்வை நிறுத்தவும், நாடாளுமன்றத்தை கலைக்கவும் அதிகாரம் உண்டு
9. 10 பேரைக் கொண்ட அரசியல் அமைப்பு பேரவைக்கு பதிலாக பாராளுமன்ற பேரவை. (பேரவையில் 5 அங்கத்தவர்கள் மாத்திரமே)
10. பாராளுமன்ற பேரவையில் சிவில் சமூக பிரதிநிதிகள் இல்லை.
11. பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் குறைப்பு.
12. இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட முடியும்.

18,19,20 ஒப்பீடு.
20ம் அரசியலமைப்புத் திருத்தத்தின் முக்கியமான சில அம்சங்கள்
1. ஜனாதிபதி அமைச்சர்களை சுய விருப்பில் நியமிக்கலாம்.
(1978 JR யாப்பில் உள்ளது)
(19 இல் பிரதமரின் ஆலோசனை முக்கியம்)
2. ஜனாதிபதி விரும்பியபோது பிரதமரை பதவி நீக்க முடியும்.
(1978 JR யாப்பில் உள்ளது)
(19 இல் முடியாது)
3. ஜனாதிபதி பாராளுமன்றத்தை 2-1/2 வருடத்தின் பின்னர் கலைக்கலாம்.
(1978 துசு யாப்பில் ஒரு வருடத்தின் பின்னர்) (19 இல் 4-1/2 வருடத்தின் பின்னர்)
4. ஜனாதிபதியாகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்க இரட்டை பிரஜைக்கு முடியாது என்ற விடயம் நீக்கம். (1978 யாப்பில் இரட்டைப் பிரஜை விடயம் இல்லை.
(19 இல் இரட்டைப் பிரஜை விடயம் அறிமுகம்)
5. ஜனாதிபதி சில உயர் பதவிகளுக்கான ஆட்களையும் குறிப்பிட்ட ஆணைக்குழு உறுப்பினர்களையும் தன் இஷ்டப்படி நியமிக்கலாம்.
(1978 JR யாப்பில் உள்ளது)
(17, 19 இல் இஷ்டப்படி முடியாது.
(18 இல் முடியும்)
இதற்கு ஜனாதிபதி பாராளுமன்றப் பேரவையின் அவதானிப்பைப் பெற வேண்டுமாயினும் அதன் முடிவுக்குக் கட்டுப்பட தேவையில்லை. 18 இலும் இவ்வாறே. 17, 19 இல் அரசியலமைப்புப் பேரவையின் முடிவுக்கு ஜனாதிபதி கட்டுப்படவேண்டும்.
6. அரசியலமைப்பு பேரவை, பாராளுமன்ற பேரவையாக மாற்றப்பட்டு அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது.
(1978 JR யாப்பில் இவ்விரண்டும் இல்லை) (17, 19 இல் அரசியலமைப்புப் பேரவை)
(18 இல் பாராளுமன்றப் பேரவை)
7. பாதுகாப்பு, அனர்த்தம் தொடர்பாக மாத்திரம் அவசர சட்டம் மூலம் சமர்ப்பிக்கலாம்.
(1978 JR யாப்பில் இக்கட்டுப்பாடு இல்லை) (19 இல் அவசர சட்டமூல விடயம் நீக்கப்பட்டிருந்தது)
8. ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது.

(தொடரும்)

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனாவும், இலங்கை அரசின் செயற்பாடுகளும்

இலங்கையில் கொரோனாவின் மூன்றாம் அலையினால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்து இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் துரித தடுப்பூசி செலுத்தக் காரணமாகவும் பயணத் தடை காரணமாக ஓரளவுக்கு கொரோனா வைரசின் செயற்பாடு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு அக்டோபர் 31ம் திகதி நாடு முற்றாக திறக்கப்பட்டுள்ளது.

2019 நல்லாட்சி அரசை வீழ்த்தி ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ச அவர்கள் ஆட்சிபீடம் ஏறியது தொடங்கி கொரோனா வைரஸ் தாக்குதலால் தடுமாறிவரும் நிலையில் உலக நாடுகளோடு ஒத்த மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியில் நாடும் மக்களும் சிக்கி திணறிவரும் நிலையில் இலங்கை அரசின் சில கெடுபிடி தீர்மானங்களால் அரசுக்கெதிரான போராட்டங்கள் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியுள்ளது.

இரசாயன உர இறக்குமதித் தடையால் விவசாயிகள் மிகுந்த நெருக்கடியை சந்தித்து வருகின்றனர். நைற்றஜன் திரவ உரம் இன்னும் முழுமையாக விவசாயிகளுக்கு கிடைக்காமல் பெருத்த ஏமாற்றத்துடனும் விரக்தியில் விவசாயிகள் ஒருபுறமும் அதிபர் ஆசிரியர்களின் போராட்டங்கள் முடிவின்றி தொடர்கின்றது.

அத்துடன் மீனவப் பிரச்சினை தலைவிரித்தாடுகின்றது. இதற்கெல்லாம் மகுடம் வைப்பதுபோல் மின்சார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தொடங்கவுள்ளனர். ஏற்கனவே பொருளாதாரம். மக்களின் வாழ்வாதாரம் விவசாயிகளின் உரப்பிரச்சினை. அதிபர் ஆசிரியர்களின் பிரச்சினையால் பாதி இருளில் உள்ள நாடு மின்சார ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் நாடு இருளில் மூழ்கப்போகிறது. இவ்வாறு இருக்கும் நிலையில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணியை உருவாக்கி அதற்கு மதவாத இனவாத குரோதம் கொண்ட ஞானசார தேரரை தலைவராக ஜனாதிபதி நியமித்து சில இஸ்லாமியர்களை உள்வாங்கி. தமிழர்களை புறக்கணித்துமுள்ளார் ஜனாதிபதி.

அரசானது தன்னை நோக்கி வரும் எதிர்ப்புப் போராட்டங்களை இராணுவம் கொண்டு. நிறைவேற்று அதிகாரம் கொண்டு அடக்கலாம் என நினைக்காமல், ஆக்கபூர்வமாக சிந்தித்து முடிந்தளவு பிரச்சினைகளை தீர்க்க முன்வரவேண்டும். தவறும் பட்சத்தில் நாடு முழுவதும் தொடர்ந்து இருளில் மூழ்குவது திண்ணம்.

# 166 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



கிளர்ச்சியாளர்களின் நோக்கம் யாதெனில், கூடிய எண்ணிக்கையில் ஆதார முகாம்களை உருவாக்குதல், அங்கு இருக்கின்ற படைப் பிரிவுகளுக்கிடையில் தொடர்பையும் ஒருமித்த செயற்பாட்டையும் ஏற்படுத்தல், சமர்ச் செயற்பாட்டுப் பரப்பை விரிவாக்குதல், எதிரியின் நிரந்தர இராணுவத்தை நகரங்களிலும் பிரதான போக்குவரத்துப் பாதைகளிலும் படிப்படியாக ஒன்றுகுவியச் செய்தல் போன்றனவாகும். இவ்வாறே, ஆதார முகாம்களை இனங்காண்பதும் அவற்றை அழிப்பதும் கிளர்ச்சியாளர்களுக்கெதிரான படையின் பிரதான பணிகளில் ஒன்றாக விளங்குகின்றது.

### கெரில்லாப் போரின் பிரதான அம்சங்கள்

முன்யோசனையுடன் நிலப்பரப்பை விட்டுச்செல்ல, தற்காப்புச் சமரை மாத்திரமன்றி, கடின சமரையும் மேற்கொள்ளல் போன்ற கெரில்லாப் போரின் பிரதான அம்சங்களில் கவனம் செலுத்தவேண்டும். நிரந்தர இராணுவத்தின் இராணுவக் கலைக் கோட்பாடுகளிலிருந்து இவ்வழக்கமற்ற (ஒழுங்கற்ற) கோட்பாடுகள் முற்றிலும் மாறுபடுகின்றன. இவை எதிரியின் படைபலத்தினது உண்மையான கணிப்பீடு, தமது சாத்தியப்பாடுகள் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளதுடன், அவசியத்தன்மை கொண்டதாகவும் விளங்குகின்றன. இவற்றைப் பின்பற்றல் இறுதி வெற்றியை எட்டுவதற்கான (தற்காப்புத் திடத்தை வைத்திருத்தலும் சேர்த்தலும்) பிரதான நிபந்தனைக்குத் துணைபுரிகின்றது. இராணுவத்தைச் செயலிழக்கச் செய்தல், பின்புலம், ஆயுதம், நடவடிக்கைப் பிரதேசம், தொடர்பு சாதனங்கள், ஒழுங்குபடுத்தல் ஆகியனவற்றைப் பெறுவதற்கும் நாட்டில் வேகமாகச் சமுக நிலையை ஏற்படுத்த முயற்சிக்கின்ற எதிரிக்கெதிராக அவற்றை நிலைப்படுத்துவதற்கும் கூடுதலான காலம் எதிர்ப்பியக்கப் படைகளிற்குத் தேவைப்படுகின்றது.

கெரில்லா அமைப்பின் மிகப் பிரதான அம்சம் யாதெனில், முதலாவது ஆயுதப் படைப்பிரிவுகள் (சில சமயங்களில் படைப்பிரிவில் மிகச் சொற்ப ஆட்கள் மாத்திரமே இருப்பார்கள்) உருவான மாத்திரத்தில் உடனேயே கெரில்லா அமைப்பு ஆரம்பமாகின்றது. எடுத்துக்காட்டாக, அப்காசியா, கரபா, பிரித்னேஸ்தரோவியா, தஜிகிஸ்தான் போன்ற இடங்களிலுள்ள போராளிகளின் முதலாவது படைப்பிரிவுகளில் வேட்டைச் சுடுகலன்கள், கைச் சுடுகலன்கள், மிகச் சிறியளவில் மாத்திரம் தன்னியக்கச் சுடுகலன்கள் ஆகியனவற்றை ஆயுதமாகக் கொண்ட *60-120* இற்கு உட்பட்ட ஆட்களே இருந்தனர். முதலாவது குழுக்களின் தொடர்ச்சியற்ற, ஒழுங்கமைப்பற்ற, குறைந்த வினைத்திறன் கொண்ட நடவடிக்கைகள் பெரிய இராணுவ அர்த்தம் கொண்டவையாக இருக்கவில்லை. அத்துடன், எதிரியைச் சரியாகக் கணிப்பிட்டுக்கொள்ளாமையால், அவனுக்கு உண்மையான அச்சுறுத்தலைத் தருவதாகவும் இருக்கவில்லை.

இருந்தபோதும், அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விடயம் யாதெனில், ஆரம்பத்தில் கிளர்ச்சியாளர்களால் எதிரியை ஒடுக்குதல், தேசிய நிலப்பரப்பை விடுவித்தல் போன்ற நோக்கில் சமர் மேற்கொள்ளப்படுவதில்லை. மாறாக, இராணுவ அமைப்பை உருவாக்கும் நோக்கிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் கட்டத்தில் இராணுவக் கட்டுமானத்தின் தலையாய கோட்பாடு - நிரந்தரமின்மையாகும். அதாவது, கடின ஒழுங்கமைக்கப்பட்ட முறை, மையப்படுத்தப்பட்ட நிர்வாகம், செயற்பாட்டு வழிவகைகளின் காலவரையறை, ஆயுதங்களை ஒருமுகப்படுத்தல் போன்றவற்றைத் தவிர்த்தலாகும். இராணுவக் கட்டுமானத்தின் இறுதிப் பெறுபேறுகளாக நிரந்தரத் தன்மை கொண்ட கிளர்ச்சி இராணுவத்தை உருவாக்குவதாக மாத்திரமே இருக்க வேண்டும். இந்த இராணுவம் போரின் மூன்றாவது கட்டத்தில் எதிரி மீது தீர்க்கமான தாக்குதல்களைத் தொடுக்கும் திறன் கொண்டதாக இருக்கும். எவ்வாறு இந்த இரண்டு எதிர்த்தரப்பினரும் ஒருவரையொருவர் அடக்கப் போகின்றார்கள் என்பது மாத்திரமின்றி, போர்க்காலம் வரை எவ்வாறு பலனளிக்கும் வகையில் வாழப்போகின்றார்களென்பதைப் பற்றியும் அறிந்துகொள்வதென்றால், வெவ்வேறு காலகட்டங்களில் எதிர்ப்புப் படைகளின் ஆளணியை ஆராயவேண்டும்.

முன்னரேயே குறிப்பிட்டபடி, கூடுதலாகச் செயலூக்கமுள்ள எதிர்ப்பின் ஆரம்பம். ஒன்று அல்லது சில சிறிய ஆயுதப் படைப்பிரிவுகளின் செயற்பாடுகளுடனும் முதலாவது ஆதார முகாம்களின் உருவாக்கத்துடனும் தொடர்புபட்டுள்ளது. இந்த ஆரம்பக்கட்டத்தில், தரையமைப்பு நிலைமைகள் ஆராயப்படுகின்றன. பிரதேச மக்களுடன் தொடர்புகள் உருவாக்கப்படுகின்றன. வேவு, பிரச்சாரம், தொடர்பு ஆகிய அமைப்புகள் தோற்றுவிக்கப்படுகின்றன. உணவுப்பொருள் மற்றும் மருத்துவப்பொருள் விநியோகத்திற்கான பாதைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. புதிய போராளிகள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். எதிரியின் முகவர்கள், கூட்டாளிகள், துரோகிகள் போன்றோர் ஒழிக்கப்படுகின்றனர்.

முதலாவது சமர்த் தாக்குதல்கள் மேலே கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில் நேரடியாகத் தொடர்புபட்டவையாக இருக்கின்றன. இத்தாக்குதல்கள் மிக அவதானமாகவும் குறுகிய நேரத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதான நோக்கம் யாதெனில், ஆயுதங்கள், வெடிபொருட்கள், தொடர்பு சாதனங்கள், போக்குவரத்து வாகனங்கள் போன்றவற்றைக் கைப்பற்றுவதாகும். படிப்படியாகச் செயற்பாட்டு வட்டம் விரிவாக்கப்படுகின்றது. அத்துடன், படைப்பிரிவுகளின் எண்ணிக்கையும் அவர்களது சமர் நடவடிக்கையின் வினைத்திறனும் அதிகரிக்கின்றது. ஆதார முகாம்களை ஒட்டியிருக்கின்ற கெரில்லாப் பிரதேசம் தோன்றுகின்றது. இது ஒட்டுமொத்தத்தில் சில வேளைகளில் போர்முனை என்றும் அல்லது விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்றும் அழைக்கப்படுகின்றது. இக்காலகட்டத்தில் கெரில்லாக்கள் தாக்கப்படாமலிருப்பதற்கு அவர்களது சமர்த்திறன் மாத்திரமின்றிப் பிரதேசத்தின் நிலைமைகள், பிரதேசப் பகுதிகளில் கூடுதலாக நடமாடும் அமைப்பாக இருத்தல் (ஆகவே தான் சில சமயங்களில் இக்கட்டம் நாடோடிக்கட்டம் எனவும் அழைக்கப்படுகின்றது), குறைந்தளவான படைப் பிரிவுகள், பிரதானமாகப் பொருள் விநியோக நோக்கத்தைப் பின்பற்றுகின்ற அவர்களது செயற்பாட்டின் தன்மைகள் போன்றனவும் ஆதரவளிக்கின்றன.

இடைக்காலத் திடீர்த்தாக்குதல்கள் கூடுதலாக இடையிடையே மேற்கொள்ள ஆரம்பிக்கப்படுவதுடன், அவை தீர்க்கமானதாகவும் இருக்கின்றன. புதிய வீரர்களுக்கு ஆயுதம் வழங்க உதவிசெய்யும் வகையில், ஆகக்கூடுதலான ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் ஏனைய இராணுவப் பொருட்களையும் கெரில்லாக்கள் கைப்பற்றுகின்றனர். ஆனால், அடுத்த நகர்வுகள் சமர் நடவடிக்கைகளைவிடக் கூடுதலான நேரத்தைப் பிடிக்கின்றன. ஒரு மாதத்திற்குப் பாரிய சமரொன்றைப் படைப்பிரிவு தயார்ப்படுத்தி, மேற்கொள்ளுமென்றால், இது முற்றிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறான தீவிரம் கூடுதலாக ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஏனெனில், அவ்வாறான படைப் பிரிவுகள் அதிகமாக இருப்பதுடன், அவற்றின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. வரையறையில் மட்டுப்படுத்தப்பட்டனவாக இருந்தாலும் ஆயுத நடவடிக்கைகள் கணிசமானளவு பிரதேசத்தை ஆட்கொள்கின்றன.

இறுதியாக, புதிய இராணுவத்தின் எண்ணிக்கை மற்றும் தராதர வளர்ச்சி ஆரம்பப் பிரதேசத்தின் எல்லைக்குள் மிக அதிகமாகின்ற தருணம் வருகின்றபோது, அடுத்த பிரதேசத்தில் இதே திட்டத்தின்படி நடவடிக்கை, அரசியல், வாழ்க்கைச் செயற்பாடுகளை நிலைப்படுத்துவதற்காக ஒரு பகுதி கெரில்லாப் படைகள் தயாராகின்றன. எதிரியால் இவ்வாறானதொரு பெருக்கத்தைத் தனது மூலோபாயப் பின்புலத்தில் தடுக்க முடியாது...

**தொடர்வான்...**
**நெற்றிபொறியன்**

# விவசாயிகளின் தொடர் போராட்டம் - நடப்பது என்ன?



இலங்கையில் கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தினால் நல்லாட்சி என்ற பெயரில் இடம்பெற்ற மைத்திரி – ரணில் கூட்டாட்சி சிறிலங்கா பொதுஜன பெரமுன என்ற மொட்டு கட்சியினால் வீழ்த்தப்பட்டு கோட்டாபய ராஜபக்ச அவர்கள் நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆட்சி பீடம் ஏறினார். நல்லாட்சி என்ற பெயரில் இடம்பெற்ற ஆட்சியில் பொருளாதார ரீதியாக மிகவும் மின்தங்கிய நிலையில் தான் இலங்கை இருந்தது.

30 வருடங்களாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் சிதைவடைந்து இருந்த பொருளாதாரத்தின் தாக்கம் நல்லாட்சியிலும் பிரதிபலித்தது. ஆனால் பொருட்களின் விலையில் ஏற்றம் காணப்படவில்லை என்பதுடன் பொருட்களின் தட்டுப்பாடு நிலவவில்லை. ஆனால் அந்த நல்லாட்சிக்கு சாவு மணியடிப்பது போல் இடம்பெற்ற ஏப்ரல் குண்டுத் தாக்குதல் பொதுஜன பெரமுன ஆட்சியில் அமர உதவியது. நல்லாட்சியில் பெரும் ஊழல் மோசடிகளும், நில அபகரிப்புக்களும் தமிழர்களுக்கான எதுவித தீர்வுகளின்றி ஓர் மந்தமான ஆட்சி இடம்பெற்றது என்பது உண்மையே.

இவற்றிற்கு எல்லாம் தீர்வு வைப்பது போலவும் நாட்டை சுபிட்சமான முறையில் கொண்டு செல்வதுடன் யுத்தத்தினாலும் நல்லாட்சியினாலும் அழிவடைந்த பொருளாதாரத்தையும் அபிவிருத்திகளையும் ஊழலற்ற ஆட்சியாக கொண்டு செல்வேன் எனக்கூறி ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதி கோட்டாபய அவர்கள் ஆட்சிபீடம் ஏறி சில மாதங்களுக்குள் கொரோனா என்னும் கொடிய வைரஸ் உலகை பிரட்டிப்போட்ட நிலையில் அதன் வீரியம் இலங்கையையும் விட்டுவைக்கவில்லை. 2019 தொடங்கிய கொரோனா கோரத் தாண்டவம் இன்றுவரை தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இந்நிலையில் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கும் இலங்கை இந்நோய்த் தாக்கத்தால் நாடு முற்றாக முடக்கப்பட்டதால் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க ஜனாதிபதி அவர்களின் தன்னிச்சையான செயல்பாடுகள் மக்களை மிகவும் மோசமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. டொலர் பிரச்சினை, மிகப் பெரும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. டொலர் தட்டுப்பாட்டால் பொருட்களின் விலை இமாலயத்தை தொட்டுள்ளது. அத்துடன் அரசுக்கு எதிரான அரச ஊழியர்களின் போராட்டங்கள் பல இடம்பெறத் தொடங்கியுள்ளது. ஆசிரிய அதிபர் போராட்டம், மீனவப் போராட்டம், மின்சார சபை ஊழியர்களின் போராட்டம் அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்களின் போராட்டம் எனப் பல போராட்டங்கள் அரசை திக்குமுக்காடச் செய்துள்ளது. அத்துடன் பொருட்களின் தட்டுப்பாட்டால் மக்கள் அவஸ்தைபடுகின்றார்கள். இவ்வாறு மக்கள் சிக்கித் தவிக்கையில் அரசானது எமது நாட்டின் முக்கிய பொருளாதார உற்பத்தியான விவசாயத்தில் விசப் பரீட்சையைத் தொடங்கியுள்ளது. அதாவது எமது நாட்டு மக்களின் முக்கிய உணவான அரிசி உற்பத்தியில் தான் அந்த விசப் பரீட்சையை தொடங்கியுள்ளது. ஆம் இரசாயன உர இறக்குமதியைத் தடை செய்தமையானது எமது நாட்டின் விவசாயிகள் மத்தியில் மிகப்பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் 2/3 பகுதியினர் விவசாயத் தொழிலை கொண்டுள்ளனர். நாட்டில் பல லட்சம் ஏக்கர் அளவில் நெல் உற்பத்தி இடம்பெற்று வருகின்றது. பெரும் போகம், சிறு போகம், என இரண்டு போகமும் சில மாவட்டங்களில் மூன்று போக நெல் செய்கையும் இடம்பெற்று வருகின்றது. இவ் நெல் உற்பத்தியின் போது விவசாயிகள் பல பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர்.

நிலம் பண்படுத்தச் செலவு, உரங்களுக்கான செலவு, கிருமி நாசினிகளுக்கான செலவு, நெல் வெட்டுக்கூலி என சந்தைப்படுத்தலுக்கிடையில் அவர்கள் பெரும் நிதியை செலவிடுகின்றனர். இவ்வாறு செலவு செய்த போதிலும் நெல்லுக்கான நீதியான விலை கிடைப்பதில்லை என விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர். அத்துடன் இயற்கை சீற்றம், சீரற்ற மழைவீழ்ச்சி, வெள்ளப் பெருக்கு, நோய்த்தாக்கங்கள் என பல போராட்டங்களை சந்தித்துவரும் நிலையில் இப்பொழுது இரசாயன உரத் தடையானது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலானது.

இரசாயன உரத்தை நிறுத்தி சேதனப் பசளையை பாவிக்கச் சொல்கிறது அரசு. அவ் சேதனப் பசளையை அரசு தருவதாகக் கூறியிருந்தது. ஆனால் அது இதுவரை இடம்பெறவில்லை. இது ஒருபுறமிருக்க பல ஆண்டுகளாக இரசாயன உரப் பாவனைக்கு பழக்கப்பட்ட மண்ணானது திடீரென சேதன பசளைக்கு மாற்றப்படும்பொழுது அதன் மூலம் கிடைக்கும் உற்பத்தி தன்மை குறைவாக இருக்கும் என விவசாயிகள் கூறுகின்றனர். குறைந்தது இந்த சேதனப் பசளை பாவனையால் அதிகமான நெல் அறுவடை கிடைக்க 10 வருடங்கள் செல்லும். மண் சேதனப் பசளைக்கு பழக்கப்பட இவ்வளவு ஆண்டுகள் தேவைப்படும் என விவசாயிகள் கூறுகின்றனர். அரசின் உர இறக்குமதி தடைக்கு எதிராக இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்றன. குறிப்பாக அநுராதபுரம், பொலனறுவையில் இடம்பெற்ற போராட்டங்களில் ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர் அவர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்நிலையில் அரசானது சீனாவிடம் இருந்து நெல் உற்பத்திக்கான உரத்தை இறக்குமதி செய்ய முன்வந்த நிலையில் அங்கிருந்து கப்பலில் வந்த உரமானது துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு அவற்றை இறக்குவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவ் உரத்தில் கனரக உலோகங்கள் கலக்கப்பட்டுள்ளதாக தெரியவந்ததையடுத்து இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ் உரங்கள் அனைத்தும் கப்பலுடன் துறைமுகத்துக்கருகில் உள்ளது. அடுத்து இந்தியாவிடம் இருந்து நைற்றஜன் என்ற திரவ உரத்தை நாட்டுக்கு இறக்கியுள்ளது அரசு. இத்திரவ உரமானது 1 லீற்றர் உரமானது ஒரு ஏக்கர் நிலத்துக்கு விசிற முடியும். ஒரு லீற்றர் உரமானது 2500 என விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. இதில் அரசின் மானிய ஒழுங்கும் உள்ளது. இவ் இரசாயன உரமானது இன்னும் பல மாவட்ட விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை எனக் கூறப்படுகிறது. நெல் விதைக்கப்பட்டு முதலாவது உரமானது போடப்படும் காலம் தற்பொழுது கடந்துள்ளதாகவும் விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். அத்துடன் நெல்லுக்குத் தேவையான கிருமிநாசினி மருந்துகள் கூட மிகுந்த தட்டுப்பாடு நிலவுகிறது. சந்தையில் ஒரு ஏக்கருக்கு அடிக்கக்கூடிய மருந்து 2500 விற்ற நிலையில் தற்பொழுது கருப்புச் சந்தையில் கிருமிநாசினி மாபியாக்கள் 20000 ரூபாவுக்கு மேல் அதனை விற்பதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

அரசானது யூரியா, அமோனியா போன்ற இரசாயன உரங்களைத் தடை செய்து நைற்றஜன் திரவ உரத்தை இறக்குமதி செய்வதானது பல ஊழல்கள் இடம்பெறலாம் என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன. எமது நாட்டு மக்களின் உணவுத் தேவைக்கான நெல்லில் 2/3 பங்கு நெல்லை இறக்குதி செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது மிகப் பெரும் அந்நிய செலாவணி ஒன்று இடம்பெறப்போகின்றது. இரசாயன உரப் பாவனையால் மக்கள் பாதிக்கப்படுவதையும் நீண்ட ஆயுள் குறைவதாகவும் அரசால் கூறப்படுகின்றது. ஆனால் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் நெல்லில் இரசாயன உரப்பாவனை கிடையாதா என்ற ஒரு கேள்வி எழுவது சகஜம். உண்மைதான் நெல்லை இறக்குமதி செய்யும்பொழுது அந் நெல்லை உற்பத்தி செய்யும் நாடுகள் இரசாயன உரம் கண்டிப்பாக பாவித்து இருப்பார்கள். அதன் மூலம் எமது உடலுக்கு தீங்கு ஏற்படாதா?. இவ்விடயத்திற்கு பின்னால் ஒழிந்திருக்கும் மர்மம் என்ன? எமது நாட்டின் மொத்த விவசாயத்தையும் அந்நியப்படுத்தி மொத்த நெல் தேவையையும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்துகொள்ள அரசு முயற்சிக்கின்றதா?. இவ்வாறு அரசு தனது தான்தோன்றித்தனத்தை விட்டு விட்டு விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டும்.

மிகப்பெரும் பட்டினிச் சாவை சந்திக்க உள்ள நிலையில் உடனடியாக அரசு அதைத்தடுக்க முன்வரவேண்டும். சரியான முறையில் செயற்படவில்லை எனக் காரணங்காட்டி அமைச்சர்களை மாற்றிக்கொண்டு இருக்காமல் எங்கே தவறு உள்ளதோ அதனை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும். அதைவிடுத்து தவறுக்கு நியாயம் கற்பிக்கக்கூடாது. முதலில் எல்லாப் போராட்டங்களுக்கும் தீர்வாக முப்படைகளையும் களமிறக்கலாம் என்னும் சிந்தனையைக் கைவிடவேண்டும். அபிவிருத்தி, பொருளாதார உயர்ச்சி எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் எதிர்நோக்கவுள்ள பட்டினிச்சாவை தடுக்கவேண்டும். பட்டினிச் சாவைத் தடுத்து விவசாயிகளின் நெல் உற்பத்தியைத் தொடர அரசு ஆவணம் செய்யுமா?

**தாயகத்தான்**

# இலங்கையில் நிகழும் இனமோதலும், முஸ்லிம்கள் - தமிழர்கள் உறவுகளும் - சமுதாய அரசியல் பார்வை

**"இலங்கை அரசு இஸ்ரேல் இராணுவத்தினருக்கும் உளவுப்பணி ஆலோசகர்களுக்கும் தம் மண்ணில் இடம்கொடுத்திருந்ததால் அரபு நாடுகளுடனான நல்லுறவில் அதற்கு ஏற்பட்டிருந்த பாதிப்பைப்போக்கி, மீண்டும் நல்லுறவு ஏற்பட இந்த மோதல்கள் வசதி செய்து கொடுத்தன."**



தீர்ப்பதற்கே மிகவும் சிரமப்படுகிற அளவுக்கு சிக்கல் நிறைந்திருக்கும் இலங்கை இனமோதலைச் சரிசெய்வதற்கு சுலபமான ஒரு தீர்வை உண்டாக்கும் மிகப் பெரிய காரணிகளுள் ஒன்று - தமிழர்களின் பாரம்பரியமான தாயகம் என்று கருதப்படும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் முஸ்லிம்களின் அரசியல் இருப்பு நிலை. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, இருபெரும் இனங்களுக்கிடையே தமிழர்கள் வளர்ந்து வரும் அம்பாறை மாவட்டத்தில் வசித்து வரும் தமிழர்கள் - முஸ்லிம்களுக்கு இடையேயான இறுக்கத்தினால் நிலைமை மோசமடைந்துள்ளது.

இந்தச் சிக்கல் அதன் இன்றைய பரிமாணங்களை எவ்வாறு வலிந்து பற்றிக் கொண்டது என்றும், பல்வேறு முக்கிய தலைவர்களால் வலிந்து தோற்றுவிக்கப்பட்ட இந்தத் தொடர்பு தேசிய அளவிலும் சர்வதேசிய அளவிலும் பயன் படுத்தப்பட்டமை குறித்தும் பகுத்துப் பார்ப்பதற்கான முயற்சியே இந்தக் கட்டுரையின் உருவாக்கம். நேர்மையுடன், எதார்த்தத்துடன் முரண்பட்டிருக்கக்கூடிய தீர்க்கப்படாத அக-இன அம்சங்கள், அவநம்பிக்கைகள் சில அதற்குள்ளேயே மறைந்திருக்கின்றன என்பது இந்தப் பகுத்தாயும் போக்கில் கண்டறியப்படும்.

**பாட்டிகாலோவில் முஸ்லிம்கள் – தமிழர்கள் மோதல் – அதன் உட்பொருளும் விளைவும்**

கிழக்கு மாகாணத்தில் உள்ள அக்கறைப்பற்றில் 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் மத்தியில் ஏறத்தாழ பத்து நாட்கள் வரை நீடித்த மிகப் பெரிய வன்முறை வெடித்ததுடன் இந்தப் பிரச்சினை தன்னைத்தானே அடையாளம் காட்டியது. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களில் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள் அதன் விளைவாக, தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர்.

முஸ்லிம்களுக்கு ஆதரவாக இருந்த அரசு ஊடகமும், அரசும், தமிழர்கள் தாக்கிய செய்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவந்த வேளையில் நடுநிலையான முஸ்லிம் தலைவர்கள் பாட்டிகாலோ உள்ளும், சுற்றுவட்டாரத்திலும் எச்சரிக்கையும் அமைதியும் வேண்டும் என்று கோரினர். இந்த வன்முறை நிகழ்வுகளில் இஸ்ரேலர்களுக்குத் தொடர்பு இருக்கக்கூடும் என்று உடனடியாகத் தகவல்கள் வெளியாயின (தமிழினப் போராளிகளை அடக்குவதற்கு இலங்கை அரசுக்கு இஸ்ரேலின் உதவி தேவைப்பட்டதால் 1985ஆம் ஆண்டின் துவக்கத்திலிருந்து இலங் கையில் இஸ்ரேலர்களின் புழக்கம் இருந்தது). பாட்டிகாலோவைச் சேர்ந்த முதியவர்கள் சிலரும், தமிழ் அமைச்சர்களான கே.டபிள்யூ.தேவநாயகம், சி.ராஜதுரை ஆகியோரும் கலவரம் நடந்ததற்கான நேரடியான காரணம் என்று 'வெளி நபர்களை'யே சுட்டிக்காட்டினர்.

இந்த மோதல்கள் அது வரை கவனத்திற்படாமல் இருந்த இலங்கை இனமோதலைப் பற்றிய ஒரு நோக்குநிலையை வெளிச்சத்துக்குக் கொணர்ந்தன. குறிப்பாக, சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே இருப்பது என்று வழக்கமாகக் கருதப்பட்டு வந்த இந்த மோதல் முஸ்லிம்களுக்கும், இந்த இரண்டு இனக்குழுக்களுக்கும் இடையேயான உறவுகளையும் சிக்கலாக்குகிறது. தமிழர்கள் - முஸ்லிம்கள் முரண்பாடு, தன் போக்கில் சிங்களவர்கள் - தமிழர்கள் முரண்பாட்டின் தன்மையையும் உட்பொருளையும் காத்திரமாகப் பாதிக்கிறது.

முதலாவதாக, இந்த மோதல் தமிழர்களின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளுள் ஒன்றை நிறைவேற்ற இயலாமல் சிரமத்தைக் கொடுக்கிறது. குறிப்பாக, இலங்கையிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலம் என்று இணைவாகக் கூறப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிர்வாக ரீதியாக ஒருங்கிணைக்க இயலாத நிலைக்குக் கொண்டு செல்கிறது. பின்னோக்கிப் பார்க்கும் பொழுது, 1985, ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற தமிழர்கள் - முஸ்லிம்கள் கலவரங்கள் கெடுவாய்ப்பான அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் 'இணைப்பு - C' யை நிராகரிப்பதற்கு அரசு முன்வைக்கும் 'சாக்குப் போக்கை உருவாக்கிக் கொடுத்தது. அந்த ஆவணத்தில் இடம்பெற்றிருந்த முன்மொழிகள் எல்லாம் இந்தியாவின் மத்தியஸ்தர்களால்கூட, அரசியல் தீர்வுக்கான அடிப்படை என்றே ஒப்புக்கொள்ளப்பட்டன.

இரண்டாவதாக, இந்த முஸ்லிம் - தமிழர் மோதலானது 'இன மோதல் உண்மையில் வடக்கு மாகாணத்தில் மட்டுமே வரையறைப் படுத்தப்பட்டது' என்று அரசாங்கம் தன் நிலைப்பாட்டை மேலும் அழுத்தமாக, அடிக்கடி கூறும்படி செய்தது. அந்த நேரத்தில், இலங்கைத் தீவின் ஒவ்வொரு பிரதேசத்திலும் தேசிய இன நிர்ணயம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து விரிவாக (வாக்குரிமை) ஆதரவைத் தேடியது. வடக்கிலும், கிழக்கிலும் - குறிப்பாக, வடக்கு மாகாணத்தில், இப்படிப்பட்ட ஒரு சமநிலையை அடையும் நோக்கத்தில் சிங்களவர்களின் புதிய குடியேற்றங்கள் தொழிற்பட்டிருக்க வேண்டும் என்றுகூட விவாதிக்கப்பட்டது. இத்தகைய புள்ளி விவர அடிப்படையிலான மறுகட்டமைப்பான பூர்வீகத் தமிழ்த் தாயகம் என்ற கருத்துப் படிவத்தை முனைப்புடன் தடுக்கும் என்று நம்பப்படுகிறது.

மூன்றாவதாக, இந்த மோதலானது அரசு அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் - சிங்களவர்களின் குடியேற்றத்தை நிகழ்த்துவதற்கு வசதி செய்து கொடுத்தது. அதன் விளைவாக, முஸ்லிம்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையோராகவும் பொருளாதார நிலையில் வளமாகவும் இருந்த அம்பாறை மாவட்டத்தில் அந்த முஸ்லிம்கள் அவற்றையெல்லாம் இழந்து கையறு நிலையை அடைந்தனர்.

நான்காவதாக, சர்வதேச உறவுகளின் நோக்கு நிலையில் பார்க்கும்போது இது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இலங்கை அரசு இஸ்ரேல் இராணுவத்தினருக்கும் உளவுப்பணி ஆலோசகர்களுக்கும்தம்மண்ணில் இடம்கொடுத்திருந்ததால் அரபு நாடுகளுடனான நல்லுறவில் அதற்கு ஏற்பட்டிருந்த பாதிப்பைப் போக்கி, மீண்டும் நல்லுறவு ஏற்பட இந்த மோதல்கள் வசதி செய்து கொடுத்தன. கிழக்கு மாகாணத்தில் ஹெலிகொப்டர்கள் மூலம் வீசிப் பரப்பப்பட்ட ஒரு துண்டறிக்கையின் 3ஆம் பக்கத்தில் பின்வரும் முக்கியமான வரிகள் இடம்பெற்றிருந்தன.

"பாலஸ்தீன விடுதலை அமைப்பு என்றால் என்ன? இந்த (நாடுகள்) லெபனான், லிபியா என்பவை யாவை? இவையெல்லாம் உலகின் முஸ்லிம் நாடுகள். வடக்கிலிருந்து பயங்கர வாதிகள் தங்கள் கைகளில் பிச்சைப் பாத்திரங் களை ஏந்திக் கொண்டு இந்த நாடுகளுக்குச் சென்று, அங்கு நிதியுதவியும், ஆயுதப் பயிற்சியும் பெற்றனர். அதே தமிழ்ப் பயங்கரவாதிகள் முஸ்லிம் நாடுகளிலிருந்து பெற்று வந்தவற்றை இப்போது இலங்கைவாழ் முஸ்லிம்களை அழிப்பதற்குப் பயன்படுத்தி வருகின்றனர்."

இந்தத் தமிழர் - முஸ்லிம் மோதல் முதன் மையாக மத மோதல் என்று மெய்ப்பிக்க அரசாங்க அளவிலான முஸ்லிம் தலைவர்களால் - குறிப்பாக, முஸ்லிம் சமய நலத்துறை மூலமாகக் கூட ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மசூதிகளிலும், முஸ்லிம் புனிதத் தலங்களிலும் ஏற்பட்ட சேதாரங் களைப் பற்றிய ஒரு கணக்கெடுப்பு உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. முஸ்லிம் சமய நலத்துறை அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு செய்த பரிந்துரை மிக முக்கியமானது:

"இயல்பு நிலைமை திரும்பாத வரையில், போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளப் படவேண்டும். மக்களே கேட்டுக் கொண்டும்கூட, நிரந்தர சிறப்புக் காவற் படை முகாமிட்டிருப்பது தெரிவிக்கப்பட வில்லை."

இவ்வகைக் கருத்து, அரசு தற்காப்பு நடவடிக்கை என்ற பெயரில் உள்ளூர் முஸ்லிம்களுக்கு ஆயுதங்களை வழங்கவும், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பாட்டிகாலோ பகுதிகளுக்கு ஊர்க்காவல் படையை அளிக்கிற அளவுக்கும் இடமளித்தது. இந்த நடவடிக்கைகள் அறிமுகமான பிறகு உள்ளூர் முஸ்லிம் தலைவர்களே கண்டனம் செய்கிற அளவுக்கு வன்முறை அதிகமானது. அரசாங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பொருத்தமான சூழ்நிலை ஏற்பட்டது.

உண்மையில், பாட்டிகாலோவில் நடைபெற்ற இந்த முஸ்லிம் - தமிழர்கள் மோதலுக்குப் பின்னால் இருக்கிற அடிப்படைப் பிரச்சினையை உருவாக்குவது எது?

இந்தப் பகுதிகளில் தமிழ்ப் போராளிக் குழுக்களின் நடவடிக்கைகளே இதற்கான நேரடியான காரணம் என்று கூறப்படுகிறது. தமிழ்ப் போராளிகள் 1982 முதல் வடக்கில் ஆதிக்கம் கொள்ளத்தொடங்கினர். அங்குதான் அவர்கள் முனைப்பான படையாக உருவெடுத்தனர். வங்கிகள் போன்ற அரசு நிறுவனங்களைத் தாக்குதல், அரசு நிறுவனங்களின் வாகனங்களையும், தனிநபர் வாகனங்களையும் கைப்பற்றுதல் போன்ற முன்மாதிரிகளை முதன் முறையாகத் துவங்கினர். தலைமறைவு இயக்கம் என்ற வகையில், அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காக அந்தப் பகுதியின் வாய்ப்பு வளங்களையே சார்ந்திருக்கவேண்டியது இன்றியமையாததானது என்றாலும், இந்தச் சார்புநிலை உருவாக்கக்கூடிய அகவயப்பட்ட சமூக நெருக்கடிகள், அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் அரசுப் பாதுகாப்புப் படைகளின் கொடிய அடக்குமுறைகளின் காரணமாக, காத்திரமான ஒரு முரண் இயக்க நிலையாகக் கருத வில்லை. ஒன்றை மற்றொன்று பாதிக்கிற இந்த முன்மாதிரி ஒர் ஒன்றுபட்ட பண்பாட்டுச் (தமிழ்) சூழலுக்குள் வளர்ச்சியுற்றது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

அரசாங்கப் பாதுகாப்புப் படைகள் அடக்கு முறை நடவடிக்கைகளை விரிவாக்கியதற்கு எதிர் வினையாக, பாட்டிகாலோ மாவட்டத்துக்குள்ளே திரிகோணமலைக்குத் தெற்குத் திசையை நோக்கிப் போர் உணர்ச்சி பரவத் தொடங்கியபோது, போராளிக் குழுக்கள் வேறொரு சமுதாயப் பண்பாட்டு அமைவில் வளர்த்தெடுத்த அதே வழிமுறைகளைப் பின்பற்றத் தொடங்கின.

11ஆம் பக்கம் பார்க்க...

**தமிழில் : சா.ஜெயராஜ்**

# இலங்கைத் தீவில் முஸ்லீம்களுக்கு எதிரான தொடர் வன்முறைகள் - வரலாற்றுப் பதிவு

**இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் 123 ஆண்டுகளாக நடைபெறுகிறது.**

*1896 - சிலாபம் கலகம் (முஸ்லிம் - கத்தோலிக்கர்)*
*1900 - அநாகரீக தர்மபாலவினால் தோற்றுவிக்கப்பட்ட 'சிங்கள மகாபோதி சபை' முஸ்லிம்களுக்கு எதிராக கடுமையான பிரச்சாரங்களை மேற்கொள்ள ஆரம்பித்தது.*
*1905.05.02 - யாழ்ப்பாண முஸ்லிம் சட்டத்தரணி அப்துல் காதர் என்பவர் முஸ்லிம் என்ற அடையாளத்துடன் (தொப்பியணிந்து) நீதிமன்றம் சென்றதால், நீதிபதியினால் நீதிமன்றிலிருந்து வெளியனுப்பப்பட்டார். ("துருக்கித் தொப்பி போராட்டம்" - இலங்கை முஸ்லிம்களின் முதலும் இறுதியுமான உரிமைப் போராட்டம்)*
*1915 - இலங்கை வரலாற்றில் அரசியல் ரீதியான முதலாவது மதக் கலவரம் கண்டியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாடுபூராகவும் இனவாதிகளால் முஸ்லிம்களின் பொருளாதாரம் முடக்கப்பட்டது.*
*1948 - இலங்கை பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகை பரம்பலை மட்டுப்படுத்த சிங்கள குடியேற்றங்களை முஸ்லிம்கள் வாழ்ந்த பிரதேசங்களில் அமுல்படுத்தினார்.*
*1972 - மடவளை கலவரம்*
*1974 - மஹியங்கன 'பங்கரகம்மன' எனும் முஸ்லிம் கிராமத்தில் கடைகள் பள்ளிவாசல்கள் வீடுகள் எரிக்கப்பட்டன.*
*1976 - இல் புத்தளத்தில் பள்ளிவாசலில் புகுந்து ஏழு முஸ்லிம்களை பொலிசார் சுட்டுக்கொன்றனர்.*
*1980 - கொம்பனித்தெரு பள்ளிவாசலில் ஒரு முஸ்லிம் சுட்டுக் கொல்லப்பட்டார்.*
*1982 - காலி துவவத்தை'யில் முழுக் கிராமமே விரட்டியடிக்கப்பட்டது.*
*1985.08.07 - மன்னாரிலுள்ள அளவக்கைப் பள்ளிவாசலில் நிகழ்த்தப்பட்ட படுகொலை.*
*1985 - ஏறாவூரில் கலவரம்.*
*1989 - சம்மாந்துறை கலவரம்.*
*1989 - அறுப்பளை பள்ளி கலவரம்.*
*1990.07.12 - புனித ஹஜ் கடமையை முடித்துக் கொண்டு திரும்பிய 68 முஸ்லிம்களை குருக்கள் மடம் பகுதியில் கொன்று புதைத்தனர்.*
*1990.07.30 - அக்கரைப்பற்றில் 14 முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.*
*1990.08.01 -('சிகப்பு ஒகஸ்ட்' ஆரம்பம்) அக்கரைபற்றில் 8 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர்.*
*1990.08.03 - காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை - முஸ்லிம்கள் இரவுத்தொழுகை நடாத்திக் கொண்டிருக்கும்பொழுது25குழந்தைகள் உட்பட 147 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.*
*1990.08.05 - அம்பாறை முல்லியன் காட்டில், 17 முஸ்லிம் விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டனர்.*
*1990.08.06 - அம்பாறையில் 33முஸ்லிம் விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டனர்.*
*1990.08.12 - சமாந்துரையில் 4 முஸ்லிம் விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டனர்.*
*1990.08.12 - ஏறாவூர் படுகொலை - ஏறாவூர் எல்லைப்புற கிராமங்களுக்குள் 36 பெண்கள், 60 குழந்தைகள் உட்பட 129 பேரை படுகொலை செய்தனர்.*
*1990.08.13 - வவுனியாவில் 9 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர்.*
*1990.08.15 - அம்பாறை அரந்தலாவைக்கு அருகேயுள்ள முஸ்லிம் கிராமமொன்றிற்குள் 9 முஸ்லிம்களை சுட்டுக்கொண்டனர்.*
*1990.09 - 50இற்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்களும், வியாபாரிகளும் கப்பம் கேட்டு கடத்தப்பட்டனர். கோடிக்கணக்கில் கப்பம் பெற்றபின் சிலர் விடுதலை செய்யப்பட, பலர் கொல்லப்பட்டனர்.*
*1990.10.- - யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியாவின் பல ஊர்களில் இருந்து வடக்கு முஸ்லிம்கள் 72000 பேர் உடுத்திருந்த உடையுடன் உடமைகளை கைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.*
*1992.04.29 - அழிஞ்சிப்பொத்தான தாக்குதல் - 56 முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டனர்.*
*1992.07.15 - கிரான்குளத்தில் பஸ்ஸிலிருந்து 22 முஸ்லிம்கள் இறக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.*
*1992.10.15 - பள்ளியகொடள்ள படுகொலைகள் - அக்பர்புரம், அஹமட்புரம் ஆகிய கிராமங்களில் சுமார் 187 பேர் கொல்லப்பட்டனர்.*
*1994 - உக்ரஸ்பிட்டி கலவரம்.*
*1997 - பேராதனை பள்ளி கலவரம்.*
*1998 - கண்டி லைன் பள்ளி பிரச்சினை*
*1998 - கலகெதர-மடிகே கலவரம்.*
*1998.05.02 - வெலிமட கலவரம்.*
*1998.05.08 - திக்குவெல்லை கலவரம்.*
*1999.02.14 - நொச்சியாகம கலவரம்.*
*1999 - பன்னல அலபட வன்முறைகள்*
*1999 - மீயெல்ல கலவரம்.*
*1999 - பதுளை ஹிஜாப் பிரச்சினை*
*2000.07.19 - வெல்லம்பிட்டி கலவரம்.*
*2000.08.17 - பள்ளேகம கலவரம்.*
*2000.09.16 - தலைவர் எம்.எச். எம் அஷ்ரப் அவர்கள் (மர்மமான) விமான விபத்தில் உயிர் நீத்த நாள் - இலங்கை முஸ்லிம் மக்கள் மீண்டும் அநாதையாக்கப்பட்ட நாள்.*
*2000.12.04 - திஹாரி கலவம்.*
*2000.12.15 - கொப்பேய்கன கலவரம்.*
*2001.04.16 - வட்டெதெனிய கலவரம்.*
*2001.04.20 - மாவனல்லை கலவரம்.*
*2001 - காலி-கட்டுகொடை கலவரம்.*
*2002.07.31 - கொட்றா முல்லை கலவரம்.*
*2002.10.25 - மாளிகாவத்தை கலவரம்.*
*2002.11.17 - மதுரங்குழி கலவரம்.*
*2002 - பேருவளை மோதல்கள் இடம்பெற்றன.*
*2005.12.05 - மருதமுனையில் அன்றிரவு 2 முஸ்லிம் மீனவர்கள் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.*
*2006.08.04. - மூதூர் முஸ்லிம்கள் வெளியேற்றம் - வெளியேற்றத்திற்கு மூன்று நாட்கள் முன், புலிகள் இராணுவத்தை தாக்குவதற்காக மூதூர் முஸ்லிம் குடியிருப்புகளுக்குள் புகுந்து மக்களை கேடயமாகப் பயன்படுத்திக்கொண்டனர். இதனால், அப்பாவி முஸ்லிம்களின் உயிர்களும், உடமைகளும் திட்டமிட்டு அழிக்கப்பட்டதோடு, ஊரை விட்டு வெளியேறவும் நிர்பந்திக்கப்பட்டனர். பின்பு வெளியேறிக் கொண்டிருந்தவர்களையும் வழிமறித்து அழைத்துச் சென்று சுட்டுக் கொன்றனர். அதன்போது, இராணுவத்தினால்புலிகள்மீதுநடாத்தப்பட்டசெல் தாக்குதலில் திட்டமிட்டபடி அகதி முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர். பின்பு தப்பி ஓடியவர்கள் சதுப்பு நிலங்களில் சேற்றினுள் புதையுண்டு இறந்தனர்.*






*2009.03.10 - மாத்தறை அகுரஸ்ஸ'யில் மீலாதுன் நபிவிழா நிகழ்வில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதில் 14 பேர் கொல்லப்பட்டனர்.*
*2011.09. - அநுராதபுரம் மாவட்டம் ஒட்டுப்பள்ளம்பகுதியிலிருந்தபல நூற்றாண்டு பழமை வாய்ந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான இஸ்லாமிய பெரியாரின் அடக்கஸ்தலம் உள்ளிட்ட நினைவு சின்னங்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் பௌத்த மதகுருமார்களின் தலைமையில் இடித்து தகர்க்கப்பட்டது.*
*2011.11.09 - மட்டக்களப்பு கள்ளியங்காடு முஸ்லிம் கொலனியில் பல ஆண்டு காலமாக இருந்து வந்த 'பிர்தௌஸ்' பள்ளிவாசல் 'பிரம்ம குமாரிகள்' நிலையமாக மாற்றப்பட்டது.*
*2012 - முஸ்லிம் வெறுப்பு பிரச்சாரங்களை மேற்கொள்வதை மட்டுமே குறியாகக் கொண்ட "பொது பல சேனா" என்ற கடும்போக்கு இனவாத அமைப்பு அரசின் ஆசியுடன் உதயமானது.*
*2012 - மன்னார், முசலி முஸ்லிம் கிராமங்களின் மீள்குடியேற்றப் பிரச்சினை - அகதிகளாக்கப்பட்ட மறிச்சுக்கட்டி, பாலைக்குழி, கரடிக்குழி மற்றும் கொண்டச்சி முஸ்லிம்கள், யுத்தம் முடிந்த பின் தமது பிரதேசத்திற்க்கு மீள்குடியேற்றப்பட வேண்டிய நிலையில், குறித்த பகுதிகளை அரசு வில்பத்து தேசிய சரணாலயத்துக்கு சொந்தமானது என வர்த்தமானியில் அறிவித்து, மக்களை மீண்டும் அகதிகளாக்கியது.*
*2012.04.20 - தம்புள்ள நகரில் அமைந்துள்ள ஹைறியா ஜும்ஆப் பள்ளிவாசல் தாக்குதலுக்கு உள்ளானது. தம்புள்ள ரங்கிரி ரஜமகா விகாரையின் தலைமை மதகுரு இனாமலுவ சுமங்கள தேரரின் தலைமையிலான குழுவொன்று பேரணியாக வந்து இத்தாக்குதலை நடத்தியது.*
*2012.05.25 - தெஹிவளை கல்விஹாரை வீதியில் உள்ள தாருர் ரஹ்மான் பள்ளிவாசலை அகற்றுமாறு கோரி பௌத்த மதகுருமார்களின் தலைமையில் ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டதோடு பள்ளிவாசலை தாக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.*
*2012.05.28 - குருநாகல் மாவட்டம் ஆரிய சிங்களவத்தையில் அமைந்துள்ள உமர் இப்னு கத்தாப் குர்ஆன் மதரஸாவில் தொழுகை நடத்துவதை நிறுத்துமாறு பௌத்த மதகுருமார்களின் தலைமையில் ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டதோடு அங்கு தொழுகை நடத்துவது நிறுத்தப்பட்டது.*
*2012.07.24 - குருநாகல் மாவட்டம் தெதுரு ஓயாகம தாருல் அக்ரம் தக்கியாவில் இரவு நேரத் தொழுகையை நிறுத்துமாறு பௌத்த மதகுருமார்களின் தலைமையில் ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டதோடு தொழுகை நடத்தவது நிறுத்தப்பட்டது.*
*2012.07.26 - கொழும்பு மாவட்டம் தெஹிவளை பீரிஸ் மாவத்தையிலுள்ள தாருல் அக்ரம் குர்ஆன் மத்ரஸாவில் தொழுகை நடாத்துவதை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக நிறுத்தியது.*
*2012.07.29 - கொழும்பு மாவட்டம் ராஜகிரிய ஒபே சேகரபுரயிலுள்ள ஜாமிஉத் தாருல் ஈமான் பள்ளிவாசலில் இரவு நேரத் தொழுகை நடாத்துவதற்கு பௌத்த மதகுருமார்களின் தலைமையில் ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டதோடு அங்கு தொழுகை நடத்துவது நிறுத்தப்பட்டது.*
*2012.08.30 - கொழும்பு மாவட்டம் வெல்லம்பிட்டி கொகிலாவத்தை பள்ளிவாசலினுள் நுழைந்த சில பௌத்தர்கள் பள்ளிவாசலை தாக்கப் போவதாக எச்சரித்தனர்.*
*2012.10.27 - அநுராதபுரம் மாவட்டம் மல்வத்து ஓயா லேன் பள்ளிவாசலுக்கு பௌத்த தீவிரவாதிகளினால் தீவைக்கப்பட்டது.*
*2012.11.30 - கொழும்பு மாவட்டம் மஹரகம நாவின்ன ரஜமகா விகாரையில் முஸ்லிம்களுக்கு எதிரான பேரணியொன்று இடம்பெற்றது. கிழக்கில் முஸ்லிம் தீவிரவாதிகளினால் பௌத்த மரபுச் சின்னங்கள் அழிக்கப்படுவதாக பொய் கூறியே இப்பேரணி இடம்பெற்றது.*
*2012.12.03 - கண்டி மாவட்டம் குண்டகசாலை விவசாய கல்லூரியில் கல்வி கற்கும் முஸ்லிம் மாணவர்களுக்கு வேண்டுமென்றே பன்றி இறைச்சி கறி பரிமாறப்பட்டது.*
*2012.12.08 - கண்டி மாவட்டம் கண்டி மாநகரத்தில் முஸ்லிம் வியாபரிகளுக்கெதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதோடு கைபேசிகள் வழியாக எதிர்ப்பு குறுஞ்செய்திகளும் அனுப்பப்பட்டன.*
*2012.12.23 - இரத்தினபுரி மாவட்டம் எம்பிலிபிட்டியவில் இரு முஸ்லிம் வர்த்தகர்கள் பௌத்த தீவிரவாதிகளினால் தாக்கப்பட்டனர். அதே இடத்தில் 24ஆம் திகதி முஸ்லிம்களுக்கெதிராக ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.*

(- தொடரும்)

**நெற்றிப்பொறியன்**

# இலங்கை அரசும், கொரோனாவின் நான்காம் அலையும்

இலங்கையில் கொள்ளை நோய்களின் தாக்கம் ஆண்டாண்டு காலமாக இடம்பெற்றுவரும் ஒரு நிலைதான் காணப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் மலேரியா நோயின் தாக்கத்தால் 1960களில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டது. அத்துடன் சின்னம்மை நோய், செங்கமாரி நோய், சிறுபிள்ளைவாதம் என்பன அக்காலங்களில் உயிர்காவு நோய்களாக பார்க்கப்பட்டது. இதில் மலேரியா நோயின் தாக்கம் மிகவும் வீரியம் பெற்று இருந்தது. ஆனால் எமது நாட்டில் அந்நோயின் தாக்கம் 1990களின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

அதன்பின் சார்ள்ஸ் வைரஸ் நோய் பரவியது. ஆனால் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டது. அதன்பின் சிக்கன் குனியா என்னும் ஆட்கொல்லி நோய் வந்து பல உயிர்களை காவு கொண்டது. அது பின்னர் எமது நாட்டின் சுகாதார வளர்ச்சி, சுகாதாரத் துறையினரின் அளப்பரிய பங்கு, அத்துடன் அரசின் துரித நடவடிக்கைகளால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இவ்வாறான நோய் கள் எல்லாம் ஒரு சில நாடுகள் மற்றும் ஒரு சில கண்டங்களை மட்டும் தாக்கி வந்த நிலையில் 2018ஆம் ஆண்டு சீனாவில் உருவான மிகக் கொடூர நோயான கொரோனா வைரஸ் உலகின் சகல கண்டங்களில் உள்ள நாடுகளையும் தாக்கி கோரத் தாண்டவம் ஆடி வருகிறது.

இவ் கொரோனா உயிர்க் கொல்லி நோயினால் உலகளவில் 50 இலட்சத்துக்கு மேற்பட்டோர் மரணமடைந்தனர். 25 கோடி மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இக் கொரோனா வைரசின் தாக்கம் எமது இலங்கையை விட்டுவைக்கவில்லை. எமது நாட்டில் 2019ஆம் ஆண்டு முதலாவது கொரோனா வைரசின் அலை தாக்கியது. ஆனால் இலங்கை, உடனேயே நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு மிக இறுக்கமான பயணத்தடை விதிக்கப்பட்டு சுமார் 4 மாதங்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இவ் நோயினால் மொத்தமாக 2500 பேர் பாதிக்கப்பட்டு 13 பேர் அப்போது உயிரிழந்தும் இருந்தனர்.

இந்நிலையில் 2020ஆம் ஆண்டு கம்பஹா மாவட்டத்தில் உள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் உருவான கொரோனா கொத்தணி, சிறைச்சாலை கொத்தணி என வீரியம் பெற்று பாரியளவில் பரவத் தொடங்கியது. இதனையடுத்து அரசானது முதலாவது அலையின் போது எடுத்த இறுக்கமான முடிவுகளை விடுத்து சற்று தளர்த்தி பயணத் தடையினை விதித்து அத்தியாவசிய பயணங்களுக்குத் தடை விதிக்காமல் சுகாதாரத் துறையினரின் உதவியுடன் கட்டுப்படுத்த முயற்சித்தது. இவ் இரண்டாம் அலையின் போது 70000 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டும் 5000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து காணப்பட்டார்.

ஒருவாறு இரண்டாம் அலையின் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில் மக்களின் அசமந்தப் போக்கும் அரசின் பொருளாதார நெருக்கடி நிலையினை கருத்திற்கொண்டு மீண்டும் கட்டுப்பாடுகளை தளர்த்தி நாடு சாதாரண நிலைக்கு கொண்டு செல்ல முற்பட்டபொழுது இந்தியாவில் உருவான டெல்டா பிளஸ் என்னும் வீரியம்கொண்ட வைரஸ் தாக்கம் இந்தியாவை அல்லோலப்படுத்திய நிலையில் உலக சுகாதார நிறுவனம் தொடக்கம் எமது நாட்டு சுகாதாரப் பிரிவு வரை எச்சரிக்கை செய்த பொழுது அரசானது நாட்டை முடக்காமல் சுகாதார வழிகாட்டிகளை அறிவித்துக் கொண்டு தனது செயற்பாட்டை மேற்கொண்டு வந்தது.

முடக்கம் செய்யாமல் விட்டமைக்கான காரணத்தை அரசு விளக்கி இருந்தது. ஏற்கனவே முதலாம் அலை, இரண்டாம் அலையின் தாக் கங்களால் நாடு முற்றாக முடக்கப் பட்டமையால் மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளதாகவும் அன்றாட கூலி தொழிலாளிகள் தொடக்கம் அனைத்து தரப்பு மக்களும் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் இதனால் இம்முறை நாட்டை முடக்குவதை தவிர்த்து தடுப்பூசி செலுத்தலை மிக வேகமாக முன்னெடுக்க அரசு சுகாதாரப் பிரிவினருக்கு அறிவுறுத்தியது. அத்துடன் சீனா, இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து தடுப்பூசிகள் இலவசமாக அவசரம் அவசரமாக இறக்கப்பட்டது. தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்கிடையில் மரணங்கள் நோயின் தாக்கங்கள் மின்னல் வேகத்தில் அதிகரித்து சென்றும் நாள் ஒன்றில் 200க்கு மேற்பட்ட மரணங்கள் இடம்பெறத் தொடங்கியது. இதில் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் அதிகளவில் மரணிக்கத் தொடங்கினர். இதனையடுத்து பலத்த அழுத்தம் காரணமாக நாட்டை அரசு முடக்கியது. இவ் முடக்கமானது முதலாம், இரண்டாம் அலையின் போது மேற்கொள்ளப்பட்ட முடக்கத்தை விட மிக விசித்திரமான முடக்கமாக பார்க்கப்பட்டது. இவ் முடக்கத்தின் போது அத்தியாவசிய கடைகள் தொடக்கம் சகல வர்த்தக நிலையங்கள், தனியார் போக்குவரத்துக்கள், அரச போக்குவரத்துக்கள் மாத்திரம் செயற்படவில்லை. ஆனால் மக்களது நடமாட்டம் வழமை போன்றே காணப்பட்டது.

இவ் மூன்றாம் அலையின் தாக்கத்தால் சுமார் 5 இலட்சத்து 40 நாற்பதாயிரம் பேர் பாதிக்கப்பட்டும் 14000 பேர் மரணித்தும் உள்ளனர். இந்நிலையில் தடுப்பூசிகள் வழங்கும் திட்டம் சுமார் 45-50 வீதம் வரை பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டு சுமார் 45 நாட்களுக்கு மேலாக முடக்கப்பட்ட நாடு மீண்டும் திறக்கப்பட்டது. அத்துடன் மாகாணங்களுக்கிடையேயான பயணத் தடையும் ஒக்டோபர் 31ஆம் திகதியுடன் நீக்கப்பட்டுள்ளது. 1-5 வரையான சகல பாடசாலைகளும் திறக்கப்பட்டுள்ளதுடன் வரும் நவம்பர் 8ம் திகதி முதல் சாதாரண மற்றும் உயர்தர பாடசாலை மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் இந்தியா உட்பட 4 நாடுகளில் புதிய வீரியம் கொண்ட Ay.4.2 என்னும் புதிய கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை செய்துள்ளது. அத்துடன் உலகில் முதலாவது கொரோனா தாக்கம் உருவான சீனாவில் மீண்டும் கொரோனா தாக்கம் அதிகரித்துள்ளதுடன் அங்கு 5 மாகாணங்களின் பாடசாலைகள் மூடப்பட்டும் சுமார் 100 நாட்களில் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் வைரஸ் சீனா, இந்தியாவை தாக்கினால் நிச்சயமாக அது எமது நாட்டையும் தாக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அத்துடன் இந்த இரு மாதங்களும் பண்டிகைக் காலங்கள் அதிகமுள்ள மாதங்களாகும். எதிர்வரும் நவம்பர் 4ம் திகதி இந்துக்களின் மிகப்பெரிய பண்டிகையான தீபாவளிப் பண்டிகை வரவுள்ள நிலையில் மாகாணங்களுக்கு இடையேயான பயணத்தடை நீக்கப்பட்டமையானது கொரோனா தாக்கம் மிக மோசமாக தாக்கும் நிலை உள்ளது.

தற்போது மக்களின் செயற்பாடானது மிகவும் மோசமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இப்பொழுது மாகாணத் தடை நீக்கப்பட்டமையால் நவம்பர் முதலாம் திகதி முதல் தனியார் அரச பஸ் சேவைகளும், தொடருந்து சேவைகளும் இடம்பெறவுள்ளன. இப் போக்குவரத்துக்களில் ஆசன மட்டத்துக்கு அளவான பயணிகளை ஏற்றும்படி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது எத்தனை வீதம் சாத்தியமாகும் எனக் கூற முடியாது. அத்துடன் மாவட்டங்களுக்குள் சேவையில் ஈடுபடும் தனியார் பேரூந்துகளில் ஆசனமட்டம் என்ற நிலைப்பாடு மீறப்பட்டு வருவது அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சேவைகள் அரச பஸ் சேவைகள் அனைத்திலும் பயணிகள் நிரம்பி வழியும் நிலையில் பயணிப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளதுடன், தீபாவளி பண்டிகைக்காக மாவட்டங்களில் உள்ள நகரங்களுக்கு மக்கள் செறிவாக பயணிப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ள நிலையில், உடுப்புக்கடைகள், பல சரக்குக்கடைகள் அனைத்திலும் சுகாதார வழிமுறைகள் மீறப்பட்ட நிலை காணப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க, இரண்டு தடுப்பூசிகளை பெற்றவர்களுக்கும் மீண்டும் கொரோனா தாக்கம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கு கொரோனா வைரஸ் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் கொழும்பில் ஒரு வைத்தியர் கொரோனாவால் மரணமடைந்துள்ளார். இவரும் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளார்.

இந்நிலையில் தற்போது மூன்றாம் தடுப்பூசி வழங்கும் திட்டம் நவம்பர் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே உலக நாடுகளை அச்சுறுத்தும் வீரியம் கொண்ட வைரஸ்கள் எமது நாட்டை நான்காம் அலையாக தாக்க இடமளிக்காமல் சகல மக்களும் பொறுப்புணர்ந்து சுகாதார வழிகாட்டலுடன் செயற்படுவதுடன் அரசானது முன்னெச்சரிக்கை நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்வதுடன் இதனை அசமந்தப்போக்கில் தவறவிடுமாயின் புதுவருட கொத்தணி, பேலியகொட மீன் சந்தை கொத்தணி போல் தீபாவளிக் கொத்தணி, நத்தார் பண்டிகை கொத்தணி உருவாக வழிசமைக்கும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.

எனவே அரசானது நோய்த் தாக்கம் அதிகரித்தவுடன் சுகாதார அமைச்சரை மாற்றம் செய்வதை விட, வருமுன் காக்கும் செயற்பாட்டை மேற்கொள்வதுடன் மக்களும் மிகுந்த அவதானத்துடன் சமூக பொறுப்புடன் செயற்பட்டு வரவிருக்கும் நான்காம் அலையினை தடுப்போம். தவறினால் உயிரிழப்புக்கள் 50000த்தைத் தொடுவதுடன் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 25 இலட்சத்தை தாண்டும். ஆகவே இந்நிலைமைவர முன்னர் அனைவரும் இணைந்து இக் கொரோனாவின் நான்காம் அலையை தடுப்போம். அத்துடன் தடுப்பூசிகளையும் மிகவிரைவில் தயக்கமின்றி பெற்றுக்கொண்டு எமது உயிரையும், மற்றவர்களின் உயிரையும் காப்பாற்றுவோமாக!.

**சுழியோடி**




# பிராந்திய செய்திகள்



## வாகன விலைகளில் மாற்றம்

சந்தையில் தற்போது வாகனங்களின் விலைகள் தற்போது ஓரளவு குறைவடைந்து வருவதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரஞ்ஜிகே (Indika Sampath Merangike) இதனைத் தெரிவித்துள்ளார். இதற்கமைய, பாதீட்டின் பின்னர், வாகனங்களின் விலைகளில் மாற்றம் ஏற்படலாமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பல பகுதிகளில் நீர்வெட்டு அமுல்

*நாட்டின் பல பகுதிகளில் நாளை (01) காலை 10 மணி முதல் 12 மணிநேர நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாகத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.*

*களனி – முதுங்கொட (புதிய வீதி) பராமரிப்புப் பணிகள் காரணமாகவே இந்த நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*அதற்கமைய, சியம்பலாபேவத்தை, பியகம, தெல்கொட, உடுபில, அக்குருமுல்ல, கந்துபொட, தெமலகம, பெலஹெல, தெகட்டன, இந்தோலமுல்ல, தொம்பே, நாரன்வல, வெலிவேரிய மற்றும் ரத்துபஸ்வல ஆகிய பகுதிகளில் இவ்வாறு நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.*

## இஸ்லாமிய திருமணம் தொடர்பான இறுதி சட்ட வரைவு இரு வாரங்களில் அமைச்சரவைக்கு

**இஸ்லாமிய திருமண - விவாகரத்து சட்டத்திருத்தம், காதி முறைமை மற்றும் சிறுவயது திருமணத்தை ரத்து செய்தல் உள்ளிட்டவை தொடர்பான இறுதி சட்ட வரைவு எதிர்வரும் 2 வாரங்களில் அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்கப்படவுள்ளது.**

**நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இதனை தெரிவித்தார்.**

**முதலாவது சட்ட வரைபு தொடர்பில் முன்வைக்கப்பட்ட திருத்தங்களை ஆராய்ந்து புதிய சட்ட வரைவு தயாரிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.**

**திருமண வயதெல்லையை 18 ஆக மாற்றுதல், திருமணத்தைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்குதல் மற்றும் அதற்குப் பெண்களின் கையொப்பத்தினையும் பெற்றுக் கொள்ளுதல், காதி முறைமையை இல்லாது செய்தல், சிறுவயது திருமணத்தைத் தடுத்தல், காதிகளாகப் பெண்களையும் நியமிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் உள்ளிட்ட யோசனைகள் அதில் அடங்குகின்றன.**

**இஸ்லாமிய திருமண சட்டத்திருத்தத்திற்கு அமையக் காதி முறைமை மற்றும் சிறுவயது திருமணத்தைத் தடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் அடங்கலாக முன்னர் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. நீதியமைச்சர் அலி சப்ரியுடன் தொலைக்காணொளி ஊடாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.**

## மலையகத்திலும் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பம்

மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை அதிகாலை 4 மணிக்கு நீக்கப்பட்ட நிலையில், மாகாணங்களுக்கிடையில் பொது போக்குவரத்து சேவையும் ஆரம்பமானது.

இதன்படி மலையகத்திலுள்ள பிரதான நகரங்களில் இருந்து கொழும்பு உட்பட இதர பகுதிகளுக்கான பேருந்து சேவை இடம்பெற்றது.

நுவரெலியா - கொழும்பு, பதுளை - கொழும்பு, கம்பளை - கொழும்பு, பூண்டுலோயா - கொழும்பு, கண்டி - பதுளை, ஹட்டன் - இரத்தினபுரி உட்பட மேலும் பல பேருந்து சேவைகள் இடம்பெற்றன.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பயணிகளை ஏற்றிச் செல்லும் நடைமுறையை தொடர்ந்து கடைபிடிக்குமாறு சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். சுகாதார நடைமுறையை மீறும் பேருந்துகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## இரண்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக இரண்டு மாவட்டங்களில் உள்ள சில பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதன்படி பதுளை மாவட்டத்தில் பசறை மற்றும் கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




## மஞ்சள் விலையில் வீழ்ச்சி

*நாட்டில் மஞ்சள் தூளின் விலை 7000 ரூபாவிலிருந்து 4500 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதுவரையில் உள்நாட்டு சந்தையில் அதிகரித்து காணப்பட்ட மஞ்சள் தூளின் விலையானது, உள்ளூர் அறுவடைகள் சந்தைக்கு கிடைக்கப் பெற்றதையடுத்து வீழ்ச்சியடைந்துள்ளது.*

*அவ்வாறே விதை மஞ்சள் கிலோவொன்றின் விலை 1000 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக குறைவடைந்துள்ளதாக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன. வெவ்வேறு பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளில் பெரும்பாலானோர் மஞ்சள் செய்கையிலும் ஈடுபட்டுள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.*





# சினிமா துளிகள்



## ஒரு காலத்தில் கொடிகட்டி பறந்த மீரா ஜாஸ்மின்

மீரா ஜாஸ்மின் தமிழ் சினிமாவில் ரன் படத்தின் மூலம் அறிமுகமானார். அதை தொடர்ந்து சண்டக் கோழி, ஆஞ்சநேயா, புதிய கீதை ஆகிய படங்களில் நடித்தார்.

மலையாள சினிமாவில் இவர் கொடிக்கட்டி பறந்தார், அதோடு தேசிய விருதே வாங்கினார். இந்நிலையில் இவர் மீண்டும் மலையாள சினிமாவில் நடிக்க வந்துள்ளார். அவரின் லேட்டஸ்ட் தோற்றம் எப்படியுள்ளார் என்பதை பாருங்க...



## 100 கோடி வசூலை அள்ளிய பிளாக் பஸ்டர் டாக்டர் திரைப்படம்

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் மற்றும் பிரியங்கா மோகன் நடித்து வெளியான திரைப்படம் டாக்டர்.

கடந்த அக்டோபர் 9-ம் திகதி வெளியாகி, இன்றுவரை சக்கைபோடு போட்டுக்கொண்டிருக்கும் டாக்டர் படம் கொரோனா இரண்டாம் அலை தாக்கத்தில் இருந்து தமிழ் சினிமாவை மீண்டு எழ செய்துள்ளது.

படம் வெளியாகி அனைவர் மத்தியிலும் நல்ல வரவேற்பை பெற்று வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் நிலையில் தற்போது படத்தின் வசூல் விவரம் வெளியாகியுள்ளது.

டாக்டர் படம் வெளியாகி இன்றுவரை கிட்டத்தட்ட 4 வாரங்கள் ஆகியுள்ள நிலையில் இதுவரை ரூ 98 கோடி வரை வசூல் செய்துள்ளது.

இந்நிலையில் இன்று சண்டே என்பதால் திரையரங்கிற்கு எப்படியும் அதிகளவில் கூட்டம் வரும், மேலும் கேரளாவிலும் இப்படம் சமீபத்தில் வெளியாகியிருப்பதால் 100 கோடியை வசூல் செய்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## காமெடி நடிகருக்கு ஜோடியாகும் நடிகை அஞ்சலி

தமிழில் கற்றது தமிழ் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் நடிகை அஞ்சலி. இவர் தற்போது ராம்சரணை வைத்து தமிழ், தெலுங்கு, ஹிந்தியில் ஷங்கர் இயக்கும் படத்திலும் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இந்த நிலையில் தெலுங்கில் பல படங்களில் காமெடி மற்றும் குணசித்ர வேடங்களில் நடித்துள்ள பிரியதர்ஷி என்ற நடிகர் முதன்முதலாக ஹீரோவாக நடிக்கவுள்ளார்.

இப்படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்கவும் கமிட்டாகியுள்ளார் அஞ்சலி. கருணா குமார் என்பவர் இயக்கத்தில் உருவாகும் இப்படம் மலையாளத்தில் வெளியான நயாட்டு என்ற படத்தின் தெலுங்கு ரீமேக் என்கிற தகவலும் வெளியாகியுள்ளது.

## உடல் எடையை குறைத்து ஸ்லிம்மாக மாறிய லொஸ்லியா

பிக் பொஸ் நிகழ்ச்சியின் மூலம் பிரபலமான லொஸ்லியா தற்போது தமிழ் சினிமாவின் வளர்ந்து வரும் நாயகி ஆகியுள்ளார்.

இவர் நடிப்பில் உருவான முதல் திரைப்படம். Friendship சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

மேலும். தற்போது கே.எஸ்.ரவிக்குமார் தயாரித்து. நடித்து வரும் கூகுள் குட்டப்பா படத்திலும் கதா நாயகியாக நடித்து வருகிறார்.



சமீபகாலமாக நடிகை லொஸ்லியா ஜிம்மில் கடும் ஒர்கவுட்டில் ஈடுபட்டு வருவதை. அவர் வெளியிடும் புகைப் படங்கள் மூலம் பார்த்து வருகிறோம்.

இதனால். ஜிம் ஒர்கவுட் மூலம் உடல் எடை குறைந்து மிகவும் ஸ்லிம்மாக மாறி அனைவருக்கும் ஷொக் கொடுத்தார்.

இந்நிலையில் உடல் எடை குறைந்து ஸ்லிம்மாக மாறியுள்ள நடிகை லொஸ்லியாவின் சமீபத்திய புகைப்படம் தற்போது வெளியாகி இணையத்தில் உலா வருகிறது.

## வெளியாவதற்கு முன்பே மிக சிறந்த விமர்சனங்களை பெறும் ஜெய் பீம்

*நடிகர் சூர்யா நடிப்பில் இயக்குனர் வுது ஞானவேல் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் தான் ஜெய் பீம்.*


*பெரியளவில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இப்படம் வரும் நவம்பர் 2 ஆம் திகதி நேரடியாக அமேசான் பிரைமில் வெளியாக இருக்கிறது.*

*இதனிடையே இப்படத்தின் ப்ரீவியூ ஷோ முக்கிய சினிமா நட்சத்திரங்களுக்கு திரையிடப்பட்டுள்ளது.*

*இந்நிலையில் இப்படத்தை கண்ட முக்கிய நட்சத்திரங்கள் பலரும் இப்படம் குறித்து ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டு வந்தனர்.*

*அதன்படி இப்படம் சூர்யாவின் திரைப்பயணத்தில் மிக சிறந்த படமாக இருக்கும் எனவும், அனைவரிடமும் ஜெய் பீம் மிக பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் பதிவிட்டுள்ளனர்.*





# பல்சுவை கதம்பம்



## இடுப்பைச் சுற்றியிருக்கும் கொழுப்பை கரைக்க வேண்டுமா?



தொப்பை கொழுப்பை குறைப்பது என்பது உலகின் கடினமான வேலைகளில் ஒன்றாகும். அதனால் நிறைய பேர் எவ்வளவு முயற்சி செய்தும் சரியாக அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை. இடுப்பை சுற்றியுள்ள கொழுப்பை கரைக்க ஒரு சில உணவுகள் உள்ளன. தற்போது அவை என்னென்ன என்பதை பார்ப்போம்.

சக்கரவள்ளிக்கிழங்கில் மிகக் குறைந்த அளவிலான கொழுப்பே உள்ளது. அதோடு இது செரிமானம் ஆக நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளும் என்பதால் அதிக நேரம் நீங்கள் எனர்ஜியுடன் இருக்க முடியும். காலை உணவாக இதனைச் சாப்பிடலாம்.

வெள்ளை அரிசியில் கார்போஹைட்ரேட் நிறைந்திருக்கிறது என்று சொல்லி அதனை தவிர்த்து வரும் வேளையில் இடுப்பின் வடிவத்தை கொடுக்க கருப்பு அரிசி எடுத்துக் கொள்ளலாம்.

கொண்டக்கடலையில் கொழுப்பு குறைவு. நார்ச்சத்து. விட்டமின்கள் மற்றும் கனிமச்சத்துக்கள் அதிக அளவில் நிறைந்துள்ளது. மேலும் இந்த கொண்டக்கடலை தினமும் சிறிது சாப்பிட்டு வந்தால், பழங்கள் மற்றும் காய்கறிகள் மூலம் கிடைக்கும் சத்துக்களைப் பெறலாம். இதனை தினமும் 1/2 கப் வேக வைத்து சாப்பிட்டு வந்தால், வயிறு நிறைவதோடு, நீண்ட நேரம் பசி எடுக்காமல் இருக்கும்.

கருப்பு பீன்ஸ் உணவை அதிகம் சாப்பிட்டால், வயிற்றில் சேரும் கொழுப்புகள் குறையும் என்று ஆய்வுகள் பலவும் கூறுகின்றன. ஆகவே மறக்காமல் இந்த கறுப்பு பீன்ஸை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

பச்சை பட்டாணியின் மூலமாக உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் குறைக்கலாம். இந்த பச்சை பட்டாணி உடலில் உள்ள ட்ரை கிளிசரைட்களின் அளவைக் குறைத்து, இரத்தத்தில் உள்ள நல்ல கொழுப்புச்சத்தை அதிகரிக்கும்.

வெள்ளை அரிசியைக் காட்டிலும் அதிக நார்ச்சத்து கொண்டது பிரவுன் அரிசி. இந்த அரிசியில் செலினியம் அதிகம் இருப்பதால், இதய நோய், கீல்வாதம், புற்றுநோய் போன்றவற்றை வரவிடாமல் தடுக்கிறது.

## சீன மம்மிகளின் DNA ஆராய்ச்சியில் வெளியான ஆச்சரியமான தகவல்கள்

*சீனாவில் உள்ள மம்மிகளின் DNA ஆய்வு முடிவுற்ற பின் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளனர். சீன மம்மிகள் சுமார் 4000 ஆண்டுகள் பழமையானவை என்று கூறப்படுகிறது. இவை பண்டைய பனி யுக ஆசிய மக்களின் வழித்தோன்றலில் வந்த வடக்கு யூரேசிய குழுவிற்கு சொந்தமானது என்றும் கூறியது.*

*இந்த மம்மிகள் அனைத்தும் சைபீரியா, அமெரிக்கா ஆகிய பகுதிகளில் உள்ள பழங்குடியின மக்களுக்கு நெருக்கமாக இருக்கிறது. இந்த வேட்டையாடும் மக்கள் கூட்டத்தின் தடயங்கள் தற்போதைய மக்கள் தொகையின் மரபணுக்களில் ஓரளவு மட்டுமே வாழ்வதாக தெரியவந்துள்ளது. இது குறித்து ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் இணைப் பேராசிரியரான கிறிஸ்டினா வாரின்றின் தெரிவித்ததாவது, மம்மிகள் கண்டறியப்பட்டதில் இருந்து அதில் கிடைக்கப்பட்ட தகவல்களானது விஞ்ஞானிகளை மட்டுமன்றி பொதுமக்களையும் வெகுவாக கவர்ந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.*

## மனிதனுக்கு பதில் ரோபோவை களமிறக்கும் பிரபல நாடு

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு முதல் முறையாக மனிதருக்கு பதில் ரோபோவை அனுப்ப ரஷ்யா தீவிர பணியில் ஈடுபட்டு வருகின்றது. ரஷ்யா நாட்டில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தை ஆய்வு செய்ய மனிதனுக்கு பதிலாக மனிதன் வடிவில் தயாரிக்கப்பட்ட ரோபோவை அனுப்பிவைக்க திட்டமிட்டுள்ளது. இந்த ஆய்விற்கு புதிய தலைமுறையின் டெலிடிராய்ட் என்று பெயர் வைக்கப்பட்ட மானுடவியல் ரோபோவை அனுப்பிவைக்க உள்ளது. மேலும் இதற்கான பணிகளில் ரஷ்யா நாடு தீவிரம் காட்டி வருகின்றது. சர்வதேச விண்வெளி மாநாடு தற்போது துபாயில் நடைபெற்று வருகின்றது. இதில் ரஷ்யா நாட்டின் விண்வெளி பயிற்சி மையத்தின் செய்தி தொடர்பாளர் கலந்துகொண்டு கூறியது. விண்வெளி ஆய்வில் மனிதர்களை ஒப்பிடும் போது ரோபோவின் பங்களிப்பு குறைவுதான். ஆனாலும் ரோபோக்கள் மண்ணை சேகரிப்பது. துளையிடுவது போன்ற முக்கிய வேலைகளை ஈசியாக செய்துவிடும். மனிதர்களால் விண்வெளியில் நீண்ட காலம் ஆய்வுகொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

## வெள்ளை வெங்காயம் இத்தனை அற்புத மருத்துவ குணங்களை கொண்டுள்ளதா?



பொதுவாக நாம் சாம்பார் வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயத்தை மட்டுமே சமையல்களில் பயன்படுத்தி வருகிறோம். ஆனால் பல நன்மைகள் நிறைந்த வெள்ளை வெங்காயத்தின் பயன்பாடு தெரிந்திருந்தும் அவற்றை நாம் அதிகம் பயன்படுத்துவது கிடையாது. உண்மையில் இது உடலுக்கு பலவகையில் நன்மை தருகின்றது. தற்போது அவை என்ன என்பதை பார்ப்போம்.

கோடை காலங்களில் அன்றாட உணவில் வெள்ளை வெங்காயத்தை அதிகமாக சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடலில் உள்ள வெப்பம் குறைகிறது மற்றும் வியர்வையை கட்டுப்படுத்துகிறது. வயிறு மற்றும் குடலில் உள்ள பக்டிரியாக்களை அழிக்கும் தன்மை கொண்டது வெள்ளை வெங்காயம். வெள்ளை வெங்காயம் தினம் தோறும் உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகிறது. வெள்ளை வெங்காயத்தில் சோடியம் இருப்பதால் வைரஸ் அனைத்தையும் அழித்து வெளியேற்றுகிறது. அலர்ஜி மற்றும் தோல் சம்பந்தமான அனைத்து நோய்களையும் கட்டுப்படுத்துகிறது. நீரிழிவு நோய் உள்ளவர்கள் அன்றாட உணவில் வெள்ளை வெங்காயத்தை சேர்த்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் கட்டுக்குள் வரும் என ஆய்வுகள் சொல்கின்றன.

வெள்ளை வெங்காயத்துடன் சம அளவு வெள்ளரிக்காய் சேர்த்து சாறு பிழிந்து குடித்து வந்தால் உடல் பருமன் மற்றும் ஊளை சதை குறையும். வெள்ளை வெங்காயத்தில் இயற்கையாக இருக்கும் சில வேதிப் பொருட்கள் (Chemicals) நம் மன நிலையை மகிழ்ச்சியானதாக மாற்றக் கூடிய தன்மை உடையது.

எனவே தினமும் வெள்ளை வெங்காயத்தை சாப்பிடும் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்வது அதிக நன்மை களை தரும். வெள்ளை வெங்காய த்தை நெய்யில் வதக்கி சாப்பிட்டு வந்தால் நரம்பு தளர்ச்சி, அடிக்கடி மயக்கம் வருவது, தொடர் உடல் சோர்வு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும். இதயம் தொடர்பான பிரச்சினைக்கு சிறந்த மருந்தாக வெள்ளை வெங்காயம் இருக்கிறது.

05ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆனால், பாட்டிகாலோவில் வேறுபட்டதொரு சமய - இனக்குழுவினர் - முஸ்லிம்கள் கணிசமான எண்ணிக்கையில் இருந்தனர். திடீரென அங்கே பிரச்சினைகள் முளைக்கத் தொடங்கின. குறிப்பாக, முஸ்லிம்களில் பெரும்பாலானோருக்குப் பாதிப்பு ஏற்பட்ட போது சிக்கல்கள் உருவெடுத்தன. அரசு அதிகாரிகளுக்கு இலங்கை முஸ்லிம் லீக் அமைப்பால் அனுப்பப்பட்ட சில கடிதங்கள் முஸ்லிம்களிடையே கருத்துரைப்பதற்கென்றே இருந்த தலைவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாட்டினை விளக்குகின்றன.

*1985, மே, 8ஆம் திகதி அன்று - அதாவது, அக்கறைப்பற்றில் மோதல் நடந்த சில வாரங்களுக்குள் தேசியப் பாதுகாப்பு அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தின் இந்தச் சில வாசகங்களைச் சான்றாகக் கூறலாம்: “வெளிப்புறப் படைகள் இங்குள்ள முஸ்லிம்களைத் தூண்டிவிடுகின்றன என்று நாங்கள் தினமும் செய்தித்தாள்களிலிருந்து தகவல் அறிகிறோம். வெளிப்புறப் படைகள் முஸ்லிம்களிடையே கிளர்ச்சியை ஏற்படுத்தியதாக ஓர் அமைச்சர் கூட கருத்து தெரிவித்திருக்கிறார். அகதிகளுள் பெரும்பான்மையோர் தமிழர்களே என்று எடுத்துரைத்து, மெய்ப்பிப்பதற்கு தமிழர் அமைச்சர்கள் அரும்பாடுபட்டு வருகின்றனர். இந்தக் குரலெடுப்பால் தமிழர்களிடையே கிளர்ச்சி ஏற்படுகிற சூழல் ஏற்படுகிறது. முஸ்லிம்களின் நிலைப்பாடு, தமிழர்களின் முன்பும், முழுத் தேசத்தின் முன்பும் திட்டவட்டமாக எடுத்து வைக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த இலங்கை தான் எங்களின் கோரிக்கை. இதுவரை தமிழர்களின் சார்பில் எங்களை எந்தத் தமிழர்களும் (பயங்கரவாதிகள் அல்லது விடுதலைப் போராளிகள்) அணுகவில்லை. முஸ்லிம்களைச் சம்பந்தப்படுத்தாமலே தமிழர்கள் தங்கள் போரை நடத்தியிருக்க முடியும்.*

*ஆயினும், கடந்த ஆறு மாதங்களாக, தமிழர்கள் விடுதலைப் போருக்கு முஸ்லிம்கள் நிதியுதவி செய்ய வேண்டியிருந்தது. அவர்கள் துணிவுடன் முஸ்லிம் வீடுகளில் நுழைந்து பணம் கொடுக்கும்படி கேட்டனர். முஸ்லிம்களின் வசமிருந்த துப்பாக்கிகளை அரசு திரும்பப் பெற்றுக் கொண்ட நிலையில் பயங்கரவாதிகளை எதிர்த்து நின்று தடுக்க முஸ்லிம்களால் முடியவில்லை. இது ஒவ்வொரு நாளும் வளர்ந்துகொண்டே போனது. ஒரு முஸ்லிம் வீட்டுக்கு இரண்டாவது தடவை பணம் கேட்டுச் சென்ற பயங்கரவாதிகள், அவர் தம்மால் பணம் கொடுக்க இயலாத நிலையை எடுத்துச் சொன்ன போது, அவருடைய மகளைக் கடத்திச் சென்று விடுவதாகக் கூறி மிரட்டினர். இதைப்போன்ற நிகழ்வுகள் கிழக்கு மாகாணத்தில் அனைத்துக் கிராமங்களிலும் தொடர்ந்து நடைபெற்றன. அக்கறைப்பற்று முஸ்லிம்கள் ‘முஸ்லிம்களை விட்டு விடுங்கள்’ என்று பயங்கரவாதிகளுக்குக் கோரிக்கை விடுத்து துண்டறிக்கைகளையும் சுவரொட்டிகளையும் அச்சிட்டு வெளியிட்டதற்கு இது தான் காரணம்!”*

*ஆயினும், உள்ளூர் முஸ்லிம் தலைவர்கள் மிகவும் தெளிவான மனோபாவத்துக்கு மாறினர். தங்களை ஒதுக்கிவிட்டதாகக் குற்றம்சாட்ட முனையாமல் பேரழிவை முடிவுக்குக் கொண்டுவர முனைந்தனர். இந்தச் சூழல் பாதிக்கப்பட்டவர்களையும், பாதிப்பை ஏற்படுத்திய பாதகர்களையும் அடையாளப்படுத்துகிற ஒன்றல்ல, இரண்டு தரப்புகளுக்கும் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடுகிற நிலைக்குச் சென்றனர் பாதிக்கப்பட்ட பகுதியில் பாதுகாப்பு உணர்வை உருவாக்குவது அவசியம் என்று கருதினர். இந்தப் பாரபட்சமற்ற நோக்கத்துடன்தான் 1970-1977-இல் கல்வித்துறை அமைச்சராக இருந்த பதியுதின் மஹமது உள்ளிட்ட முஸ்லிம் தலைவர்கள் போராளிகளின் தலைமையைத் தொடர்புகொள்ளத் திட்டமிட்டு, சென்னைக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பினர்.*

*தமிழர்களின் போராட்டப் போக்கில் முஸ்லிம்கள் சந்திக்கக்கூடிய குறிப்பிட்ட சிக்கல்களுக்கு இந்த மோதல் ஓர் அறிகுறியாகும். எனினும், கணிசமான அளவில் வசித்துக் கொண்டிருந்த ஒரே பிராந்தியத்தில் - அதாவது, கிழக்கு மாகாணத்தில் தங்கள் அரசியல் வலிமையை இழந்துவிடுவோமோ என்ற முஸ்லிம் சமூகத்தின் இயல்பான அச்சமே இது என்பது வெளிப்படையானது. தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு வேண்டும் என்று கருதப்பட்ட வேளையில், கிழக்கு மாகாணத்தில் உள்ள எல்லாப் பகுதிகளையும் விட்டு விட்டு, அம்பாறை மாவட்டத்தை மட்டும் பிரிப்பதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது அம்பாறை மாவட்டத்தை விலக்கிவிட்ட னர். அவர்கள் கிழக்கு மாகாணத்தில் பாட்டிகாலோ, திரிகோணமலை மாவட்டங்களைப் பற்றி மட்டுமே பேசினர்.*

*டிசம்பர், 12-ஆம் திகதி அன்று அனைத்து - இலங்கை முஸ்லிம் லீக் அமைப்பின் அம்பாறை மாவட்ட ஒன்றியத்திலிருந்து பதியுதின் மஹமதுவுக்கு அனுப்பப்பட்ட கடிதம் கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் முஸ்லிம்களின் அரசியல் கோரிக்கை களைப் பின்வருமாறு தொகுத்துரைக்கிறது: “மாகாண சட்ட மன்றங்களை நிறுவும் பொருட்டு மேன்மைமிகு ஜனாதிபதி முன்வைத்துள்ள வரைவை வரவேற்கிற அதேவேளையில், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி கிழக்கு மாகாணத்தின் மற்ற பகுதிகளை விட்டுவிட்டு, அம்பாறை மாவட்டத்தை மட்டும் பிரிக்கவும், பாட்டிகாலோ, திரிகோணமலை மாவட்டங்களை வடக்கு மாகாணத்துடன் இணைக்கவும் கோரியுள்ளதைக் கடுமையாக மறுதலிக்கின்றனர். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் இந்தக் கோரிக்கை கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதான சமூகங்களான சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்கிடையேயான இனத்துக்குரிய சமநிலையைப் (ethnic balance) பாதிப்பது மட்டுமல்லாமல், இலங்கையிலுள்ள முஸ்லிம்களின் அரசியல் வலிமையையும் தீவிரமாகப் பாதிக்கும். அம்பாறை மாவட்டம் கிழக்கு மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டால், கிழக்கு மாகாணத்திலுள்ள 3,75,355 நபர்களுக்கு - அதாவது, இந்த நாட்டின் மொத்த முஸ்லிம் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமானோருக்கு, தகுதியான பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும். சுருங்கக்கூறின், இந்த நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் முக்கியத்துவம் அற்ற ஒரு சிறுபான்மை இனமாக முஸ்லிம் சமூகம் குறைக்கப்பட்டுவிடும் இலங்கையில் அது தனது அரசியல் வலிமையை முற்றிலும் இழந்துவிடும்.”*

(தொடரும்...)

## அல்- மீசான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா வெளியிட்டு வைத்த பல்துறை கலைஞர் அலிக்கான் எழுதிய “நெஞ்சில் பூத்த நெருப்பு” கவிதை நூல்

(மாளிகைக்காடு, கல்முனை நிருபர்கள்)

கவிஞர், பல்துறை கலைஞர் என்.எம்.அலிக்கான் எழுதிய "நெஞ்சில் பூத்த நெருப்பு" கவிதை நூல் வெளியீட்டு விழா அல்- மீசான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் மாளிகைக்காடு வாபா றோயளி மண்டபத்தில் அல்-மீசான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவின் நிகழ்ச்சி திட்டப்பணிப்பாளரும், ஊடகவியலாளருமான எம்.எஸ்.எம். ஸாக்கிரின் நெறிப்படுத்தலில் அல்-மீசான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவின் தவிசாளரும், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவையின் பணிப்பாளருமான, சிலோன் மீடியா போரத்தின் பொருளாளர் நூருல் ஹுதா உமரின் தலைமையில் இடம்பெற்றது.

அல்- மீசான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவின் 15 ஆவது ஆண்டை முன் னிட்டு இடம்பெற்ற இந்த நிகழ்வில் கொரோனாவில் உயிரிழந்தவர்கள், கொரோனாப் பணியில் களப்பணியாற்றிய போது உயிர்நீத்த வைத்தியர்கள், சுகாதாரத்துறை ஊழியர்கள், பாதுகாப்பு படையினர் எல்லோரையும் நினைவுகூர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு ஆரம்பமானது. இந்நிகழ்வில் நூல் ஆய்வுரையை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவரும், பிரபல இலக்கிய செயற்பாட்டாளருமான, கவிஞர், ஆசிரியர் ஜெஸ்மி மூஸா நிகழ்த்தினார். முதல் பிரதியை அஹமட் அலி வைத்தியசாலையின் முதல்வர் எம்.எம்.இஸ்ஸதீனும், இரண்டாம் பிரதியை முனைமருதவன் எம்.எச்.எம். இப்ராஹீமும் பெற்றுக்கொண்டனர்.

சட்டமொழுங்கு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளரும், இலங்கை பொதுசேவை ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஏ.எல்.எம். சலீம், பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் முஸ்லிம் விவகார தேசிய இணைப்பாளர் சிராஸ் ஜுனூஸ், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவையின் தவிசாளரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பேரவை உறுப்பினருமான கலாநிதி அன்வர் எம் முஸ்தபா, பார்ட்னர்ஸ் போ சேன்ஜ் இன்டர் நேஷனலின் சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட பணிப்பாளர் பிரபல உயிரியல் பாட ஆசிரியர் நிசாத் செரீப் ஆகியோர் முன்னிலை அதிதிகளாக கலந்துகொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று மற்றும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர் அஸாத் எம்.ஹனீபா, ஆயுர்வேத ஆராய்ச்சி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே.எல்.எம். நக்பர், ஐக்கிய காங்கிரஸ் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத், அம்பாறை மாவட்ட கலாச்சார அபிவிருத்தி இணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.தௌபீக், அம்பாறை மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ட .எம்.றிம்ஸான் ஆகியோர் கலந்துகொண்டதுடன் அரச உயரதிகாரிகள், பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஸ்ரப், வைத்தியர்கள், கலை, இலக்கிய செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரமுகர்கள், எழுத்தாளர்கள், ஊடக அமைப்புக்களின் பிரதானிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் டைட்டானிக் இசைக்குழுவின் பிரதானி இசையமைப்பாளரும் பாடகருமான எம்.எச்.றியாஸ்கான் இசையமைத்து பாடிய "எங்கள் தாயகமே" எனும் பாடல் இறுவெட்டும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டதுடன் கலை, இலக்கிய, ஊடக செயற்பாட்டாளர்கள் பலரும் கௌரவிக்கப்பட்டனர்.





## சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்

*உலகில் உள்ள மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி இகழ்ந்தாலும் சரி நீ உண்மை என்னும் பாதையிலிருந்து அணுவளவேனும் பிறழாமல் கவனமாக இருக்க வேண்டும்.*

*மனிதப் பிறவிதான் பிரபஞ்சத்திலேயே மிகச் சிறந்ததாகும்.*
*எல்லா மிருகங்களைக் காட்டிலும் எல்லாத் தேவர்களைக் காட்டிலும் மனிதர்களே உயர்ந்தவர்கள். மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் யாரும் இல்லை.*

*பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. அதையும் தாண்டி மனிதன் அடைய வேண்டிய அனுபவங்கள் பல உள்ளன.*
*மன நிம்மதி, அன்பு, தவம், தியானம் முதலிய குணங்கள் எல்லாம் பணத்தால் வருபவை அல்ல.*

*மற்றவர்களின் தெய்வீக இயல்பை வெளிப்படுத்த உதவி செய்வது தான் நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழியாகும்.*

*உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.*
*நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல.*
*மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம்.*

# வடகடலில் சீனர்கள்?



வடமராட்சி கிழக்கில் வீதித் திருத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த மங்கோலிய முகச்சாயலைக் கொண்ட ஒருவரைக் கண்ட சுமந்திரன் அவரைச் சீனர் என்று கருதி ட்விட்டரில் ஒரு குறிப்பைப் பதிவிட்டிருந்த சம்பவம் பற்றி அனைவரும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அறிந்திருப்பீர்கள். உள்நாட்டில் வீதித் திருத்த பணிகளிலும் சீனர்கள் வேலைக்கமர்த்தப்படுவதாக அப்பதிவில் உள்ளது. ஆனால் அது சீனர் அல்ல கிழக்கை சேர்ந்த ஒரு முஸ்லிம் என்பது தெரிய வந்ததும் சுமந்திரன் தான் வெளியிட்ட தகவலுக்காக வருத்தம் தெரிவித்திருந்தார். மேலும் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் சுமந்திரனுக்கு ஒரு பதில் குறிப்பையும் அப்போது பதிவிட்டிருந்தது.

வழமையாகத் தான் என்ன கதைக்கிறேன் என்பதனை நன்கு சிந்தித்து பிடி கொடாமல் கதைக்கும் சுமந்திரன் இந்த விடயத்தில் அவசரப்பட்டு ஏன் அப்படியொரு குறிப்பை ட்விட்டரில் போட்டார் ? சீனர்கள் நாடு முழுவதும் பரவி விட்டார்கள் என்ற பிரமை அவருக்கு ஏற்பட்டுள்ளதா? ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அவ்வாறு ஒரு பிரமை ஏற்படக் காரணம் என்ன? கௌதாரிமுனை கிராம சேவகர் பிரிவிற்குள் வரும் கல்முனை பந்தலடி என்ற பகுதியில் அமைந்திருக்கும் கடலட்டைப் பண்ணையில் சீனர்கள் காணப்பட்டமையும் அதற்கு ஒரு காரணமா?

அக்கடலட்டைப் பண்ணை பற்றிய விபரத்தை முதலில் வெளிப்படுத்தியது கிளிநொச்சியை சேர்ந்த ஒரு செய்தியாளர்தான். அப்பகுதியில் சீனர்கள் கடந்த இரண்டரை மாதங்களாக கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டு வருவது தொடர்பான தகவல்கள் அச்செய்தியாளருக்கு கிடைத்தன. மீனவர் சங்கத்தின் சில முக்கியஸ்தர்கள் சீனர்களோடு இணைந்து செயற்படுவதாகவும் சந்தேகிக்கப்படுகிறது. தனக்குக் கிடைத்த தகவலை உறுதிப்படுத்துவதற்காக கல்முனை பந்தலடிக்கு மேற்படி செய்தியாளர் சென்றிருக்கிறார். அங்கிருந்த சீனர் கடல் வழியாகப் படகின் மூலம் அந்த இடத்தைவிட்டு நீங்கிச் செல்வதை கண்டிருக்கிறார். அந்த படகில் கியூலன் Guilan (Pvt) Ltd பிரைவேட் லிமிடெட் என்று எழுதப்பட்டிருக்கிறது.

அரியாலைகிழக்கில்ஏற்கனவே இயங்கிவரும்கடலட்டைக்குஞ்சுகளை உற்பத்தி செய்யும் பண்ணையிலிருந்து அவர்கள் படகுகள் மூலமாகவே கல்முனை பந்தலடிக்கி வந்து போகிறார்கள். ஊடகங்களில் அந்த இடம் கௌதாரிமுனை என்று குறிப்பிடப்பட்டாலும் அது கல்முனை பந்தலடி என்பதே சரி. கல்முனைக் கடலில் வெற்று பிளாஸ்டிக் பரல்களை பரப்பி அவற்றின்மீது குடில் ஒன்றை அமைத்து சீனர்கள் அதில் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் பூநகரிப் பகுதியூடாக அதாவது தரை வழிப் பாதை ஊடாக அந்தப் பகுதிக்கு செல்வதில்லை. மாறாக கடல்வழிப் பாதை ஊடாக அரியாலை கிழக்கில் இருந்து அங்கே வருகிறார்கள். கல்முனை பந்தலடியிருந்து கிழக்கு அரியாலை இருபது நிமிடங்களுக்கு குறையாத கடற்பயணத் தூரம்

அரியாலைகிழக்கில்ஏற்கனவே கடலட்டைக் குஞ்சு உற்பத்திப் பண்ணை ஒன்று இயங்கி வருகிறது. அந்தப்பண்ணை 2011ஆம் ஆண்டு ஒரு தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களக் குடிமகனின் பெயரில் பதியப்பட்டுள்ளது. அவர் தான் 2018இல் சீனர்களை அங்கே கொண்டு வந்தார். சீனர்களோடு தமிழர்களும் வேலை செய்கிறார்கள். முகாமையாளராக இருப்பவர் ஒரு தமிழர். உதவியாளர்களாகவும் தமிழர்கள் உண்டு. அப்பண்ணை கடற்கரையில் ஒரு தனியாருக்கு சொந்தமான காணியில் அமைக்கப்பட்டிருக்கிறது. கடற்கரையில் 16 சீமெந்துத் தொட்டிகளை உருவாக்கி அந்த தொட்டிகளில் கடற் சூழலை செயற்கையாக ஏற்படுத்தி அதற்குள் கடலட்டைக் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறார்கள். இந்த கடலட்டைக் குஞ்சுகளைத்தான் சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் உட்பட பெரும்பாலான கடலட்டை வளர்ப்பவர்கள் விலைக்கு வாங்குகிறார்கள். அப்பண்ணையைத்தான் கல்முனை கடலை நோக்கி அவர்கள் விஸ்தரிக்க முயன்றதாக கருதப்படுகிறது.

ஆனால் சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் அதற்கு அனுமதி வழங்கவில்லை. அதைத்தொடர்ந்து கல்முனை பந்தலடி பகுதியைச் சேர்ந்த விநாயகர் கடற்றொழிலாளர் சங்கத்தின் பெயரால் இரண்டு ஏக்கர் காணியில் கடலட்டைப் பண்ணை ஒன்றை உருவாக்குவதற்கு பிரதேச செயலரிடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது. எனினும் அனுமதி இதுவரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் சீனர்கள் கடற்றொழிலாளர் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலருடைய அனுசரணையோடு அங்கே கடலட்டை வளர்ப்பை தொடங்கிவிட்டார்கள் என்று கூறப்படுகிறது.

2009இற்குப்பின் கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக தமிழ் கடற்பகுதிகளில் கடலட்டை பண்ணைகள் அதிகரித்த அளவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. சுமார் 15 கடலட்டைகளைக் கொண்ட ஒரு கிலோ கடலட்டை கிட்டத்தட்ட 20,000 ரூபாய்க்கு போகிறது. இது சீனாவில் கிட்டத்தட்ட இரண்டு லட்சத்துக்கு விற்கப்படுமாம். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கடலட்டையில் பெரும்பகுதியை சீன நிறுவனங்களே கொள்வனவு செய்கின்றன.

அரியாலை கிழக்கில் சீனர்கள் தங்கியிருக்கும் பண்ணை அமைந்திருக்கும் இடம் யாழ் குடா நாட்டின் வரைபடத்தில் குடாக்கடலை நோக்கி துருத்திக்கொண்டு தெரியும் ஒரு நிலத்துண்டு ஆகும். அப்படித்தான் கல்முனை பந்தலடியும். பெரு நிலப்பரப்பிலிருந்து கடலை நோக்கி துருத்திக்கொண்டு தெரியும் ஒரு நிலத்துண்டு அது. இவ்விரண்டு நிலத்துண்டுகளிலும் நிலை கொண்டிருப்பவர்கள் குடாக்கடலின் மீது தமது கண்காணிப்பை வைத்திருக்கலாம்.

சர்ச்சைக்குரிய கடல் அட்டை பண்ணையில் இருந்து கிட்டத்தட்ட ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் ஒரு கடற்படை முகாம் உண்டு. கல்முனையில் இருந்து குறுக்காக கிட்டத்தட்ட 48 கிலோமீட்டர் தொலைவில் நெடுந்தீவு காணப்படுகிறது. நெடுந்தீவில் இருந்து குறுக்காக ஏறக்குறைய 50 கிலோ மீட்டர் தொலைவிலேயே தமிழகம் காணப்படுகிறது. நெடுந்தீவும் உட்பட யாழ் குடா நாட்டின் மூன்று தீவுகளில் சீனா மீளப் புதுப்பிக்கப்படும் எரிசக்தித் திட்டம் ஒன்றை நிறுவ இருக்கிறது. அதற்குரிய காணிகள் சுவீகரிக்கப்பட்டு வேலியிடப்பட்டு அவற்றில் இது மின்சார சபைக்கு சொந்தமான இடம் இதற்குள் யாரும் நுழையக்கூடாது என்று அறிவித்தல் பலகை நடப்பட்டிருக்கிறது.

**அல்லைப்பிட்டியில் சில வருடங்களுக்கு முன்பு சீனர்கள் மேற்கொண்ட ஆய்வு**

எனவே கிழக்கு அரியாலை, கல்முனையில் பந்தலடி, நெடுந்தீவுமுட்பட மூன்று தீவுகள் ஆகியவற்றை இணைத்து குடாக்கடல் உள்ளடங்களாக பாக்கு நீரிணையில் நெருக்கமான ஒரு வலைப்பின்னலை உருவாக்கலாம். அப்படிப்பார்த்தால் இதை வெறுமனே கடலட்டை விவகாரமாக மட்டும் பார்க்கலாமா என்று சந்தேகிப்பவர்களும் உண்டு.

ஆனால் சீனர்கள் உலகம் முழுவதும் தாங்கள் சந்தைகளைத் தான் திறப்பதாக கூறுகிறார்கள். தங்களுடைய பிராந்தியத்துக்கு வெளியே உலகில் எந்த ஓரிடத்திலும் தாங்கள் போர்முனையைத் திறக்கவில்லை என்றும் கூறுகிறார்கள். சீன விரிவாக்கம் எனப்படுவது முழுக்க முழுக்க முதலீட்டு விரிவாக்கம்தான். உட்கட்டுமான அபிவிருத்திதான். இந்த உட்கட்டுமான அபிவிருத்திகள் அனைத்தும் சீனாவை நோக்கி மூலப் பொருட்களை கொண்டு செல்லும் அதேசமயம்சீனாவில்இருந்துஉற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வெளிச் சந்தைக்கு கொண்டு வரும் நோக்கிலானவை. எனவே சீனா உலகம் முழுவதும் முதலீடுகளை மட்டுமே நகர்த்தி வருவதாக கூறிக் கொள்கிறது.

மாறாக மேற்கு நாடுகள் படைகளை நகர்த்துகின்றன. உலகின் பல்வேறு இடங்களில் மேற்கு நாடுகள் படைத்தளங்களைப் பேணி வருகின்றன. ஆனால் சீனா பொதுவாக முதலீடுகளைத்தான் நகர்த்தி வருகிறது. அது ஆக்கிரமிப்பு நோக்கிலானது அல்ல என்று சீனாவை ஆதரிப்பவர்களும் சீன முதலீடுகளை ஊக்குவிப்பவர்களும் கூறிவருகிறார்கள். சீனா பல்வேறு நாடுகளின் படையெடுப்புக்கு உள்ளாக்கியதே தவிர சீனா ஒருபோதும் பிறநாடுகள் மீது படையெடுக்கவில்லை என்று அண்மையில் மகிந்த ராஜபக்ச உரையாற்றியிருந்தார். சீனக் கொமியூனிஸ்ட் கட்சியின் நூறாவது ஆண்டு நிறைவையொட்டி நடந்த வைபவத்தில் காணொளித் தொழில்நுட்பமூடாகக் கலந்து கொண்டு அவர் அவ்வாறு உரையாற்றினார்.

சீனாவுக்கு எதிராக தேவையற்ற பயம் ஒன்றை உலகம் முழுவதிலும் உள்ள ஒரு பகுதி விமர்சகர்கள் மற்றும் ராஜதந்திரிகள் கட்டி எழுப்பி வருவதாக சீனாவின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். இது ஒருவித அச்ச நோய். அதாவது சீனா போபியா என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இது தனிய முதலீடு மட்டுமல்ல இதுவும் ஒரு ஆக்கிரமிப்புத் தான் என்று சீனாவை சந்தேகத்தோடு பார்ப்பவர்கள் கூறுகிறார்கள். பலமான ஒரு பொருளாதாரம் நிதி ரீதியாக நலிவுற்ற பொருளாதாரங்களின் மீது மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு இதுவென்றும் தேவைகளை அடிப்படையாக வைத்து இயலாமையைச் சுரண்டி ஒரு சந்தை ஆக்கிரமிப்பு முன்னெடுக்கப் படுகிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அதை சீனாவின் கடன் பொறி அல்லது சந்தை குண்டு என்றும் அவர்கள் அழைக்கிறார்கள்.

மேலும் சீனப் பெருந்தலைவர் மாவோ சே துங் முன்பு கூறிய ஒரு கதையை அவர்கள் நினைவுபடுத்துகிறார்கள். பெரிய மீனும் சிறிய மீனும் வசிக்கும் ஒரு கடலில் பெரிய மீன் சிறிய மீன்களை தனக்கு உணவாகச் சாப்பிட்டு வந்தது. ஒரு கட்டத்தில் சிறிய மீன்கள் பெரிய மீனிடம் போய் முறையிட்டன. அப்பொழுது பெரிய மீன் கூறியது இங்கு எல்லோருமே சமம். அவரவர் அவரவருக்கு விருப்பமானதை சாப்பிடலாம் என்று. ஆனால் சிறிய மீன்களால் அவற்றின் சிறிய வாயால் எப்படி பெரிய மீனைச் சாப்பிடுவது ?

நாடுகளுக்கிடையே நிதி ரீதியாக ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் பொழுது பலம் தொடர்பில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கும் பொழுது எல்லாரும் ஒன்றுதான் எல்லாருக்கும் சம வாய்ப்பு என்று கூறும்பொழுது பலமானது பலவீனமானதை தின்றுவிடும். வறிய நாடுகளை நோக்கிய சீனாவின் முதலீடுகளும் அப்படிப்பட்டவை தான் என்று சீன முதலீடுகளை விமர்சிப்பவர்கள்சுட்டிக் காட்டுகிறார்கள். இவ்வாறான வாதப்பிரதிவாதங்களின் பின்னணியில்தான் இலங்கைத் தீவிலும் சீன முதலீடுகள் அதிகரித்து வருகின்றன. அவை தென்னிலங்கையை தாண்டி தமிழ்ப் பகுதிகளுக்கும் பரவத் தொடங்கி விட்டன. குறிப்பாக தென்னிந்தியாவுக்கு அண்மையில் வந்துவிட்டன. இதன் விளைவாக ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரின் அருண்ட கண்களுக்கு இருண்டதெல்லாம் சீனாவாகத் தெரிந்ததா?

**-மறவன்-**

# காலநிலை தொடர்பான மாநாடு ஆரம்பம்



ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஸ்கொட்லாந்தின் க்ளாஸ்கோ நகரைச் சென்றடைந்துள்ளார்.

ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர், அந்த நாட்டு நேரப்படி நேற்று (30) பிற்பகல் 12.30 அளவில் கிலாஸ்கோ சர்வதேச விமான நிலையத்தை அடைந்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன, ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினரை வரவேற்றார்.

காலநிலை மாற்றங்களும், அதற்கு முகங்கொடுத்துச் செயற்படுவதற்காக நாடுகள் திட்டமிடும் வழிமுறைகள் தொடர்பாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன், குறித்த மாநாடு இன்று (31) முதல் எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதேவேளை, நாளை மற்றும் நாளை மறுதினங்கள் உலகத் தலைவர்களின் மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில், 197 நாடுகளின் அரச தலைவர்கள், அரச பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுமார் 25,000 பேர் கலந்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை நீக்கப்பட்டது

நாட்டில் கொவிட் பரவல் காரணமாக அமுல்படுத்தப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை இன்று (31) காலை 4 மணியுடன் நீக்கப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடையை நீக்குவதற்கான தீர்மானம் கடந்த கொவிட் செயலணி கூட்டத்தின்போது எடுக்கப்பட்டது.

மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொவிட் பரவலைக் கட்டுப்படுத்தி, நாட்டை வழமைக்குக் கொண்டு வரும் செயற்பாட்டில், மாகாண மற்றும் மாவட்ட சுகாதார பணிப்பாளர்கள் அதிக பொறுப்புடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி கோரியுள்ளார்.

அத்துடன் சுகாதார தரப்பினர் உள்ளிட்ட முன்வரிசை சேவையாளர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நாளை (01) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.




# அதிகரித்துவரும் அரிசியின் விலை

சந்தையில் அரிசியின் விலை தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்கமைய, புறக்கோட்டை சந்தையில் ஒரு கிலோ நாட்டரிசி 140 ரூபாவுக்கும், ஒரு கிலோ சம்பா அரிசி 150 ரூபாவுக்கும், ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 220 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தப் பின்னணியில் குறித்த பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் இந்தியாவிலிருந்து மாத்திரமின்றி பாகிஸ்தான் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளிலிருந்தும் அரிசி இறக்குமதி செய்யப்படுவதாக வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் அரிசியின் விலை அதிகரித்து காணப்பட்டது. இதனையடுத்து, அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டதோடு, சந்தையில் ஏற்பட்ட அரிசி தட்டுப்பாடு காரணமாக அது நீக்கப்பட்டது.

இந்நிலையில் அரிசி ஆலை உரிமையாளர்களால் புதிய விலைகள் அறிவிக்கப்பட்டதோடு ஒரு கிலோ நாட்டரிசி 115 ரூபா எனவும், ஒரு கிலோ சம்பா அரிசி 140 ரூபா எனவும், ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 165 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் குறித்த விலையை மீறி அதிக விலைகளில் சந்தையில் அரிசி விற்பனை செய்யப்படுகின்றது. அதிகரித்த அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் இந்தியாவிலிருந்து ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை கட்டம் கட்டமாக இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசி சதொச ஊடாக விற்பனை செய்யப்படுவதோடு, நுகர்வோருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் 5 கிலோ அரிசி மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# ஆடுகளத்தில் முழந்தாளிடுவதை நிராகரித்த குயின்டன் டி கொக் மண்டியிட்டார்

இலங்கைக்கு எதிரான நேற்றைய போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாக தென் ஆபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் குயின்டன் டி கொக் சக வீரர்களுடன் இணைந்து, நிற வெறிக்கு எதிராக முழந்தாளிட்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார். ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றுவரும் உலக கிண்ணப்போட்டியில் நிற வெறிக்கு எதிராக வீரர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இதற்காக போட்டி தொடங்குவதற்கு முன், மைதானத்தில் முழந்தாளிட்டு சபதம் ஏற்கின்றனர்.

அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் தென் ஆபிரிக்க வீரர்கள் மைதானத்தில் முழந்தாளிட்டு அமர்ந்தனர். ஆனால் விக்கெட் காப்பாளர் குயின்டன் டி கொக் மட்டும் இடுப்பில் கைவைத்து நின்றார். பின்னர், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டி தொடங்குவதற்கு முன்னதாக, அனைவரும் மண்டியிட வேண்டும் என தென் ஆபிரிக்க கிரிக்கெட் சபை தமது வீரர்களிடம் தெரிவித்தது. இதை ஏற்க மறுத்த குயின்டன், போட்டியில் இருந்து விலகிக்கொண்டார்.

இதற்கு பல்வேறு தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது. இந்நிலையில், "ரசிகர்களிடமும், சகவீரர்களிடமும் முதலில் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். நிற வெறிக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து குரல் கொடுப்பதன் முக்கியத்துவம் புரியும். முன்னுதாரணமாக இருக்க வேண்டிய பொறுப்பு வீரர்களுக்கு இருக்கிறது.

நான் இனவெறிக்கு எதிராக முழங்காலிட்டு சபதம் ஏற்பது மற்றவர்களுக்கு பாடமாக அமைந்தால், மற்றவர்கள் சிறப்பாக வாழ உதவினால், அதை விட மகிழ்ச்சியானது வேறொன்றும் இல்லை. நான் நிற வெறி பிடித்தவன் இல்லை. என்னை நன்கு அறிந்தவர்களுக்கு இது தெரியும். என்னை நிற வெறியன் என்று அழைத்த போது வேதனை அளித்தது. என் குடும்பத்திலும் கறுப்பினத்தவர் உள்ளனர். இந்த விடயத்தில் எனக்கு ஆதரவு அளித்த அணித்தலைவர் பவுமாவுக்கு நன்றி. இனிவரும் போட்டிகளில் நான் விளையாடுவேன்" என குயின்டன் டி கொக் கூறினார்.



# விளையாட்டு செய்திகள்

## காலணிகள் 1.5 மில்லியன் டொலருக்கு விற்பனை



பிரபல கூடைப்பந்து வீரர் மைக்கல் ஜோர்டான் (Michael Jordan) அணிந்த காலணிகள் 1.5 மில்லியன் டொலருக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளன. கூடைப்பந்து விளையாடத் தொடங்கிய காலகட்டத்தில் அந்தக் காலணிகளை ஜோர்டான் அணிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தச் சிவப்பு, வெள்ளைக் காலணிகளை ஜோர்டான் 1984ஆம் ஆண்டு அணிந்ததாக அவற்றை ஏலத் திற்கு விட்ட Sotheby's நிறுவனம் கூறியது. ஏலத்தில் ஆக அதிக விலைக்கு விற்கப்பட்ட காலணிகளும் அவை தான் என்றது Sotheby's.

இதற்கு முன்னர், சென்ற ஆண்டு ஆகஸ்ட்டில் 615,000 டொலருக்கு Nike Air Jordans காலணிகள் ஏலத்தில் விற்கப்பட்டன. அரிய விளையாட்டுக் காலணிகளுக்கான தேவை அதிகரித்து வருகிறது. அத்தகைய காலணிகளைச் சேகரிப்பவர்களைத் தவிர்த்து, பொது மக்களும் அவற்றில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## 20க்கு20 புதிய தரவரிசையில் இலங்கை வீரர்கள் முன்னேற்றம்

சர்வதேச கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ள புதிய ரி 20 அணிகளுக்கான தரவரிசை மற்றும் வீரர்களுக்கான தரவரிசை என்பவற்றில் இலங்கை கிரிக்கெட் அணி மற்றும் இலங்கை வீரர்கள் முன்னேற்றம் காண்பித்திருக்கின்றனர். புதிய ரி 20 அணிகளுக்கான தரவரிசையில் ஏற்கனவே 10ஆவது இடத்தில் காணப்பட்ட இலங்கை கிரிக்கெட் அணி தற்போது 09ஆவது இடத்திற்கு 233 புள்ளிகளுடன் முன்னேறியிருக்கின்றது. இதேநேரம் ரி 20 அணிகள் தரவரிசையில் முதலாம் இடத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் அணி 278 புள்ளிகளுடனும் இரண்டாம், மூன்றாம் இடங்களில் முறையே இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் 264 புள்ளிகளுடனும் காணப்படுகின்றன.

நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய இரண்டு அணிகளும் முறையே 255 மற்றும் 249 புள்ளிகளுடன் 4ஆம், 5ஆம் இடங்களில் உள்ளன. புதிதாக வெளியிடப்பட்டுள்ள ரி 20 அணிகளின் சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் இலங்கையின் வனிந்து ஹஸரங்க (139 புள்ளிகளுடன்) 08ஆம் இடத்திற்கு முன்னேறியிருக்கின்றார். தற்போது நடைபெற்று வருகின்ற ரி 20 உலகக் கிண்ணத்தில் அயர்லாந்து அணிக்கு எதிரான மோதலில் துடுப்பாட்ட வீரராக சிறப்பாட்டத்தினை வெளிப்படுத்திய வனிந்து ஹஸரங்க 08ஆவது இடத்திற்கு வந்திருப்பதன் மூலம் ரி 20 சகலதுறை வீரர்கள் வரிசையில் முதல் தடவையாக பத்து இடங்களுக்குள் முன்னேறியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ரி 20 சகலதுறை வீரர்கள் தரவரிசையில் பங்களாதேஷின் சகீப் அல் ஹசன் (275 புள்ளிகளுடன்) தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ரி 20 சகலதுறை வீரர்கள் தரவரிசை ஒருபக்கமிருக்க வனிந்து ஹஸரங்க ரி 20 பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் 726 புள்ளிகளுடன் தொடர்ந்தும் இரண்டாம் இடத்தில் காணப்பட, ரி 20 பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் தப்ரைஸ் சம்ஷி 750 புள்ளிகளுடன் முதலிடத்தில் காணப்படுகின்றார். புதிய ரி 20 துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையினை நோக்கும் போது இங்கிலாந்தின் டேவிட் மலான் (831 புள்ளிகளுடன்) முதலிடத்தில் காணப்பட, பாகிஸ்தானின் பாபர் அசாம் (896 புள்ளிகளுடன்) இரண்டாம் இடத்தில் காணப்படுகின்றார். இதேநேரம் மூன்றாம் இடத்தில் தென்னாபிரிக்க அணியின் எய்டன் மார்க்ரமும், நான்காம் ஐந்தாம் இடங்களில் முறையே பாகிஸ்தானின் மொஹமட் ரிஸ்வான் மற்றும் இந்தியாவின் விராட் கோலி ஆகியோர் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## பீஜிங் மரதன் போட்டியும் ஒத்திவைப்பு



சீனாவில் கொரோனா தொற்று அதிகரிப்பதால், பீஜிங் மரதன் ஓட்டப்போட்டி காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 30,000 பேர் வரை பங்கேற்கவிருந்த மாரதன் போட்டி ஒக்டோபர் 31ஆம் திகதி நடக்கவிருந்தது. சீனாவின் 11 மாகாணங்களில் 133 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதாக சீன அரசு தரப்பு கூறியுள்ளது. அவர்கள் அனைவருமே டெல்டா திரிபால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் நான்ஜிங் கொரோனா பரவலுக்குப் பின்னர் இது தான் மிகப் பெரிய பரவலாக கருதப்படுகிறது. தற்போதைய நோய்ப் பரவலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் அனைவரிடமும் கொரோனா சோதனை மேற்கொள்ளப்படுவதோடு கடும் பொது முடக்கங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 1981ஆம் ஆண்டு பீஜிங் மரதன் நடத்தப்பட்டு வருகிறது. இது சீனாவின் மிகப்பெரிய உள்ளூர் விளையாட்டு நிகழ்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மரதன் பாரம்பரியமாக தியானென்மென் சதுக்கத்தில் ஆரம்பித்து, பீஜிங் ஒலிம்பிக் பூங்காவிலுள்ள கொண்டாட சதுக்கத்தில் நிறைவடையும். இதே வேளை சீனாவின் அண்மைய வைரஸ் பரவல் மேலும் விரிவடையக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. எல்லா வட்டாரங்களிலும் கண்காணிப்பைத் தீவிரப்படுத்துமாறு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். அனைத்து வட்டாரங்களிலும் பயண த்தைக் குறைத்துக்கொள்ளுமாறு அவர்கள் அறிவுறுத்தினர்.

சீனா வைரஸ் பரவலைப் பெருமளவு கட்டுப்படுத்தியிருந்தது. பெப்ரவரியில் குளிர்கால ஒலிம்பிக் நடக்கவுள்ளதால் ஆங்காங்கே ஏற்படும் பரவலைக் கட்டுப்படுத்துவதில் முனைப்பாக உள்ளது. சீனாவின் 11 வட்டாரங்களில் கடந்த வாரம், சமூக அளவில் 100க்கும் அதிகமானோருக்கு நோய்த் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அவர்களில் பெரும்பாலோர், 13 சுற்றுலாக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள். அதிக அபாயமிக்க வட்டாரங்களுக்கு சுற்றுலா ஏற்பாடு செய்யப் பயண நிறுவனங்களுக்குச் சீனா தடை விதித்துள்ளது. நோய்ப் பரவல் நீடிக்கும் ஏதேனும் ஒரு வட்டாரத்துக்குச் சென்றவர்கள், பீஜிங் திரும்புவதற்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

## அப்ரிடியின் சாதனையை முறியடித்தார் ஷகிப் அல்-ஹசன்

20 ஓவர் உலகக்கிண்ண போட்டியில் 41 விக்கெட் வீழ்த்தியதன் மூலம் பாகிஸ்தான் வீரர் அப்ரிடியின் சாதனையை ஷகிப் அல்-ஹசன் முறியடித்துள்ளார். இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகிப் அல்-ஹசன் 2 விக்கெட் வீழ்த்தினார். இதனால் 20 ஓவர் உலகக்கிண்ண போட்டியில் அவரது விக்கெட் எண்ணிக்கை 41 ஆக (29 போட்டிகளில்) உயர்ந்தது. இதன் மூலம் ஷகிப் அல்-ஹசன் 20 ஓவர் உலக கிண்ண வரலாற்றில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவரான பாகிஸ்தானின் அப்ரிடியின் (39 விக்கெட்டுகள், 34 ஆட்டங்கள்) சாதனையை முறியடித்தார்.



20 ஓவர் கிரிக்கெட் உலக கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பில் இந்தியா முன்னணியில் இருப்பதாக பிரெட் லீ தெரிவித்துள்ளார். 20 ஓவர் வடிவிலான கிரிக்கெட்டில் நாங்கள் அதிகமாக சாதித்ததில்லை. அதை மாற்றுவதற்கு இதுவே சரியான நேரம். அதற்கு எல்லா வகையிலும் நாங்கள் முயற்சிக்க வேண்டும். ஆனால் இங்கிலாந்து. இந்தியா. நியூசிலாந்து போன்ற வலுவான அணிகள் உள்ள நிலையில் கிண்ணத்தை வெல்வது எளிதானது அல்ல.

இந்த அவுஸ்திரேலிய அணியில் திறமையான வீரர்கள் நிறைந்துள்ளனர். இதில் டேவிட் வார்னர் முக்கிய வீரராக இருப்பார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் அவர் நடத்தப்பட்ட விதத்தால் அவரது நம்பிக்கை குறைந்திருக்கலாம். ஆனால் அவர் முக்கியமான தருணத்தில் ஜொலிக்கக் கூடியவர். உலக கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பில் இந்தியா முன்னணியில் இருக்கிறது. இந்த உலக கோப்பையில் அதிக ஓட்டக் குவிப்பில் இந்தியாவின் லோகேஷ் ராகுலும். அதிக விக்கெட் வீழ்த்துவதில் முகமது ஷமியும் முதலிடம் பிடிப்பார்கள் என எதிர்பார்க்கிறேன் என தெரிவித்துள்ளார்.



# உலக பார்வை



## நீண்ட தூரம் சென்று தாக்கும் வெடிகுண்டு சோதனை வெற்றி



போர் விமானத்தில் இருந்து ஏவி, தரையில் உள்ள நீண்ட தூர இலக்கை துல்லியமாக சென்று தாக்கக்கூடிய வெடிகுண்டுச் சோதனை வெற்றிகரமாக நடந்தது.

தரையில் நீண்டதூரம் உள்ள இலக்கை துல்லியமாக சென்று தாக்கக்கூடிய வெடிகுண்டை டி.ஆர்.டி.ஓ., எனப்படும் ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த வெடிகுண்டு, ஒடிசாவின் சண்டிபூரில் உள்ள ராணுவ சோதனை தளத்தில் இருந்து பரிசோதிக்கப்பட்டது.

இந்திய விமானப் படையின் போர் விமானத்தில் இருந்து போடப்பட்ட வெடிகுண்டு, தரையில் நீண்ட தூர இலக்கை துல்லியமாக சென்று தாக்கியது. இந்த சோதனை வெற்றிகரமாக நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கிடையே, 'ட்ரோன்' எனப்படும் ஆளில்லா சிறிய ரக விமானத்தை செயல் இழக்க செய்யும் 'அப்யாஸ்' என்ற நவீன தொழில்நுட்பமும் ஒடிசா கடற்கரை பகுதியில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

## திருடிய கலைப்பொருட்களை திருப்பிக்கொடுக்கும் பிரான்ஸ்

பெனின் நட்டில் இருந்து 1892 ஆம் ஆண்டு பிரான்ஸ் துருப்புகளால் திருடப்பட்ட 26 கலைப் பொருட்களை அந்த நாட்டுக்கே திருப்பி அளிப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மெக்ரோன் அறிவித்துள்ளார். இந்தப் பொருட்கள் அபோமி அரச மாளிகையில் இருந்து திருடப்பட்டவையாகும்.



பாரிஸில் உள்ள குவாய் பிரான்லி அருங்காட்சியகத்தில் இருக்கும் இந்தக் கலைப்பொருட்களை பார்வையிட்ட பின்னரே மெக்ரோன் இந்த அறிவிப்பை வெளியிட்டார். தமது வரலாற்றை அணுகுவதற்கு ஆபிரிக்க இளைஞர்கள் மறுக்கப்படக்கூடாது என்று அவர் கூறினார்.

இந்த அருங்காட்சியக வைபவத்தில் பெனின் வெளியுறவு அமைச்சர் அவரலின் அக்பெனொன்சியும் பங்கேற்றிருந்தார். இரு நாட்டு உறவில் புதிய அத்தியாயம் திருப்பப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக கடந்த புதன் கிழமை தற்போது நைஜீரியாவின் எடோ மாநிலமாக இருக்கும் பெனின் இராச்சியத்தில் இருந்து காலனித்துவ காலத்தில் திருடப்பட்ட வெண்கல சேவல் ஒன்றின் சிலையை பிரிட்டன் நைஜீரியாவிடம் திருப்பிக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## பயணக்கட்டுப்பாட்டை நீக்கியது சிங்கப்பூர்




கொவிட்-19 தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 14 நாட்கள் பயண வரலாறு தொடர்பான நடைமுறைப் பட்டியலில் இருந்து ஆறு தெற்காசிய நாடுகளை சிங்கப்பூர் நீக்கியுள்ளது.

பங்களாதேஷ், இந்தியா, மியான்மார், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளே சிங்கப்பூரின் பயணக் கட்டுப்பாட்டு பட்டியலில் இருந்து இவ்வாறு நீக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி, இந்த நாடுகளைச் சேர்ந்த அனைத்து பயணிகளும் சிங்கப்பூரில் பிரவேசிக்கவும் சிங்கப்பூர் வழியாகப் பயணங்களை மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுவர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொவிட் -19 தொற்றின் உலகளாவிய நிலவரத்திற்கு ஏற்ப சிங்கப்பூர் இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்த விதித்துள்ள கட்டுப்பாடுகளில் தளர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது. அந்த வகையில் இந்தியா, இலங்கை உள்ளிட்ட ஆறு தெற்காசிய நாடுகளை அதன் பயணக் கட்டுப்பாடு பட்டியலில் இருந்து இவ்வாரம் முதல் நீக்குவதாக அவ்வமைச்சு குறிப்பிட்டுள்ளது. என்றாலும், இந்நாடுகளைச் சேர்ந்த பயணிகள் மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். இதில் 10 நாட்கள் ஒரு பிரத்தியேக வசதிகள் கொண்ட வீட்டில் தங்கியிருப்பதற்கான அறிவிப்பு காலமும் அடங்கியுள்ளது. தெற்காசியப் பிராந்தியத்தைச் சேர்ந்த இந்த நாடுகளின் கொவிட்-19 தொற்று நிலைமை குறித்து மதிப்பாய்வு செய்து இந்நீக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இடம்பெற்ற மெய்நிகர் செய்தியாளர் மாநாடொன்றில் சுகாதார அமைச்சர் ஓங் யே குங், 'இந்த நாடுகளில் கொவிட் 19 தொற்று பரவுதல் கட்டுப்பாட்டு நிலைமை தற்போது முன்னேற்றகரமாக உள்ளது. அதனால் அந்நாடுகளில் இருந்து வரும் பயணிகள் இங்கு இறங்குவதைத் தடுக்கும் கடுமையான விதிகள் இனி தேவையில்லை' எனக் குறிப்பிட்டதாக 'ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்' சுட்டிக்காட்டியுள்ளது. இதே வேளை சிங்கப்பூரின் அண்டை நாடுகளான மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளிலும் இவ்வாற நடுப்பகுதி முதல் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிங்கப்பூரில் இதுவரையும் கொவிட் 19 தொற்றுக்கு 165,663 உள்ளாகியுள்ளனர். அவர்களில் 294 பேர் உயிரிழந்துள்ளனர்.

## சூடானுக்கான உதவியை நிறுத்தியது உலக வங்கி

சூடானில் சிவில் அரசுக்கு எதிராக இராணுவம் மேற்கொண்ட ஆட்சிக் கவிழ்ப்பை அடுத்து அந்நாட்டுக்கான உதவிகளை உலக வங்கி இடைநிறுத்தியுள்ளது. கடந்த திங்கட்கிழமை அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டது நாட்டில் பெரும் ஆர்ப்பாட்டங்களைத் தூண்டியதோடு சர்வதேச கண்டனங்களுக்கும் காரணமானது.

இந்நிலையில் சட்டவிரோதமாக ஆட்சியை கைப்பற்றியதற்கு ஆபிரிக்க ஒன்றியம் சூடானை அந்த அமைப்பில் இருந்து இடைநிறுத்தியுள்ளது. அமெரிக்கா சூடானுக்கான 700 மில்லியன டொலர் உதவியை முடக்கியது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிகாரப் பகிர்வு உடன்படிக்கையின் கீழ் ஆட்சியில் இருந்த சிவில் மற்றும் இராணுவத் தலைவர்களுக்கு இடையே தொடர்ந்து முறுகல் நிலை இருந்து வந்தது.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவர ஆரம்பித்த விரைவிலேயே சூடானுக்கான உதவிகள் நிறுத்தப்பட்டிருப்பது அந்த நாட்டுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்துவதாக இருக்கும். மார்ச் மாதத்தில், சூடான் தனது நிலுவைத் தொகையை சரிசெய்த பின்னர், கிட்டத்தட்ட 30 ஆண்டுகளில் முதல் முறையாக உலக வங்கியிடமிருந்து பில்லியன் கணக்கான டொலர்களை மானியமாக அணுக முடிந்தமை குறிப்பிடத்தக்கது.




சீனாவில் உள்ள பல பெட்ரோல் நிலையங்கள் டீசலை குறிப்பிட்ட அளவிலேயே மக்களுக்கு விற்பனை செய்து வருகின்றன. குறைந்த டீசல் விநியோகம் மற்றும் அதிகரித்து வரும் விலை உயர்வால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில ட்ரக் ஓட்டுநர்கள் டீசல் நிரப்ப நாள் முழுவதும் காத்திருக்கவேண்டிய சூழல் ஏற்படுவதாக சீனாவின் சமூக வலைத்தளமான வெய்போவில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு பதிவில் கூறப்பட்டிருந்தது.

சீனாவில் தற்போது நிலக்கரி மற்றும் இயற்கை எரிவாயுவிற்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் அங்கு கடும் மின் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் மற்றும் வீடுகளில் மின்சாரம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே அடிவாங்கியிருக்கும் சர்வதேச விநியோக சங்கிலி இந்த சமீபத்திய தட்டுப்பாடால் மேலும் அதிகரிக்கும். தற்போது ஏற்பட்டுள்ள இந்த டீசல் தட்டுப்பாடு, நீண்டதூர வர்த்தகத்தை பெரிதும் பாதிக்கிறது. குறிப்பாக சீனாவுக்கு வெளியில் உள்ள சந்தைகளுக்கு செல்லும் வர்த்தகத்தை இது கடுமையாக பாதிக்கிறது என பொருளாதார புலனாய்வு பிரிவின் சீன பணிப்பாளர் மேட்டி பெங்கிங் தெரிவித்துள்ளார்.



**கால்மியா லாடிஃபோலியா** (Kalmia Latifolia)

பிங்க் மற்றும் வெள்ளை நிறத்தை சேர்த்த வண்ணம். அமெரிக்காவின் பென்சில்வேனியா. கனக்டிகட் உட்பட உலகின் பல்வேறு இடங்களிலும் இந்தப் பூக்கள் இருக்கின்றன. இந்த பூவில் கொடிய விஷத்தன்மை உண்டு. தெரியாமல் இதை கொஞ்சம் அழுத்தமாய் முகர்ந்தாலோ. பறித்து வாயில் போட்டாலோ வாந்தியில் தொடங்கி. ஹார்ட் அட்டாக். கோமா என மரணத்தில் கொண்டு விடும். இந்த பூவில் தேன் குடிக்கும் தேனீ சேமித்து வைக்கும் தேனைச் சாப்பிட்டாலும் மரணம் நேரும்.

**ஓனாதே க்ரோகாடா** (Oenanthe Crocata)

வெள்ளை நிறத்தில் இங்கிலாந்து. சுவீடன். பிரான்ஸ். ஸ்பெயின் போன்ற இடங்களில் இந்த பூக்கள் அதிகமாய் வளரும். பெரும்பாலும் ஈரமான பிரதேசங்களில் காணப்படும். இந்த பூவைத் தெரியாமல் சாப்பிட்டால். மூளை மயங்கி போதை ஏறும். 70 சதவீதம் மரணம் நிச்சயம். மயக்கமடைவது. பித்துப்பிடித்தது போல அலைவது. உளறிக்கொட்டுவது. பின்நோக்கி விழுவது. சட்டென உடலில் எங்கோ ஒரு வலி தோன்றி தலையில் போய் சம்மட்டி அடிப்பது. கண்கள் மேல் நோக்கி சொருகுவது. மூக்கில் ரத்தம் வடிவது என கொடுமைப்படுத்தும்.

**அடேனியம் ஒபிசம்** (Adenium Obesum)

ஆப்பிரிக்க கண்டத்தில் விளையும் இந்த வகைப் பூ கொடிய விஷம் உடையது. இந்தப் பூக்களைப் பறித்து அரை நாள் கொதிக்க விட்டு. நீர் ஆவியாகிப் போனபின் வற்றிக் கிடக்கும் கெட்டியான பிசின் கொடிய விஷம். ஆதிவாசிகள் அம்புகளின் நுனியில் விஷத்தைத் தடவி விலங்குகள் மீது எய்துவதற்கு பயன்படுவது பெரும்பாலும் இந்த விஷம் தான். இது கொஞ்சம் உடம்பில் சென்றால் கொஞ்சம் கொஞ்சமாக அந்த விலங்கோ. மனிதனோ கொஞ்ச நேரத்திலேயே மயங்கி விழுந்து இறந்து விடுவான்.

**சங்குனாரியா கனாடெனிசிஸ்** (Sanguinaria Canadensis)

கர்ப்பமான பெண்கள் இதை முகர்ந்து பார்த்தால். தாய்மை நிலை கேள்விக்குறியாகி விடும். அதுமட்டுமல்ல. இதன் நச்சுத் தன்மை உடலில் இறங்கினால் கோமா நிலைக்குப் போய்விடும் அபாயமும் உண்டு. இந்த பூக்கள் தோலிலுள்ள செல்களை கொன்று விடுமள வுக்கு ஆபத்தானவை.

**செர்பெரா ஒடொல்லம்** (Cerbera odollam)

இது நமது இந்தியாவிலுள்ள ஒரு பூ. 'சைலன்ட் கில்லர்' என அழைக்கப்படுகிறது. இந்த பூவில் விஷத்தன்மை உண்டு. அந்த விஷத் தன்மை உடலில் கலந்து விட்டால் வெளியே தெரியாது. கொஞ்சம் கொஞ்சமாக உடலுக்குள் அந்த விஷம் மெதுவாய்ப் பரவி முதலில் மயக்கத்தையும். அப்படியே மரணத்தையும் தந்து விடும். விஷம் உடலில் கலந்திருப்பதையும் கண்டு பிடிப்பது கடினம்.

**கோல்கியம் ஆடம்னேல்** (Colchicum Autumnale)

இங்கிலாந்து. நியூசிலாந்து போன்ற இடங்களில் தான் இவை செழித்து வளரும். இதை நிறைய சாப்பிட்டால் மரணம் நிச்சயம். ஆனால். உடலின் ஒவ்வொரு பாகமும் செயலிழக்க. வலியில் துடித்து சாக வேண்டி வரும்.

**கேஸ்டர் செடி** (Castor plants)

ஆமணக்கு எண்ணெய் இந்த செடியிலிருந்து தான் வருகிறது. இந்தியாவில் எல்லா இடங்களிலும் கிடைக்கும் இந்தச்செடி விஷத் தன்மை உடையது. தெரியாமல் ஒன்றிரண்டு விதைகளைச் சாப்பிட்டால் மரணம் நேரிடுவதைக் கூட தவிர்க்க முடியாது. இப்போதைக்கு கின்னஸ் உலக சாதனைப் பட்டியல் நூலில் அதிக விஷமுடைய செடி எனும் பெயர் இதற்கு உண்டு.

**ஏஞ்சல் ட்ரம்பெட்** (Angel Trumpet)

ட்ரம்பெட் இசைக்கருவியைப் போன்ற அமைப்பில் கொத்துக் கொத்தாய்த் தொங்கும். தென்னமெரிக்கக் காடுகளில் இது அதிகம் காணப்படுகின்றன. ஆனால் இந்த பூக்களிலுள்ள நச்சுத்தன்மை உடலில் கலந்தால் அவர்கள் சுயநினைவில்லாதவர்கள் போல எதை யெதையோ செய்ய ஆரம்பிப்பார்கள். ஆனால் முழுமையான உணர்வுடன் தான் இருப்பார்கள். உளவியல் ரீதியிலான பாதிப்புகளை இந்த பூ உண்டாக்கிவிடும்.

**டெத் காமாஸ்** (Death Camas)

இந்த செடியில் இரண்டு வகைப் பயிர்கள் உண்டு. ஒன்று சாப்பிடக்கூடிய வகை. அதை 'எடிபிள் காமாஸ்'. இன்னொரு வகை 'டெத் காமாஸ்'. இரண்டையும் பார்த்து சட்டென வித்தியாசம் காண முடியாது. கொஞ்சம் சாப்பிட்டால் கூட உள் உறுப்புகளையெல்லாம் காலி செய்து மனிதனை சாகடிக்கும் இந்த தாவரம்.

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ. தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு. தினப்புயல் நிறுவனத்தால் 31.10.2021 அன்று வெளியிடப்பட்டது.